Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன் 389 — National Tamil Daily — தேசிய தினசரி — தபாற் பெட்டி எண் 49

மலர் 5 | யாழ்ப்பாணம் | சுபகிருது | பங்குனி 2 ஆம் நாள் | ஷவ்வால் 18 | (15-3-63) | வெள்ளிக்கிழமை | இதழ் 65

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

ஒரு வருடத்துக்கு ரூபா 40-00

6 மாதத்துக்கு ரூபா 21-00

3 மாதத்துக்கு ரூபா 11-00

நாடற்றவருக்கு எதிராக சட்டம் இயற்றுதீர்!

இலங்கையிடம் இந்தியா உறுதி கேட்கிறது

கொழும்பு, வியாழன்

இலங்கையிலுள்ள இந்தியவம்சாவழியினரான 'நாடற்றவர்' பிரச்னை பற்றி ஒரு இறுதித்தீர்வு ஏற்படும் வரை, அவர்களுக்கெதிராக 'பாரபட்சமான' சட்டங்கள் எதையும் நிறைவேற்றுவதில்லை என்று உத்தரவாதம் அளிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா கேட்டுள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்னை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் நேருவுக்கும் இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கும் மிடையில் பேச்சுவார்த்தை நடைபெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கிடையில் இலங்கையிலுள்ள 'நாடற்றவர்களுக்கு' எதிராக பாரபட்சமான சட்டங்களை இயற்ற வேண்டாமென உத்தரவாதமளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் கேட்டுள்ளது.

தோட்டங்களிலும் மற்றும் அரசாங்க, தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் இலங்கையருக்குமட்டுமே வேலையளிப்பதற்கான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சி செய்துவருவதை முக்கியமாகக் குறிப்பிட்டே இந்த உத்தரவாதத்தை இலங்கை அரசாங்கத்திடம் இந்திய அரசாங்கம் கோரியிருப்பதாக நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

கொழும்பில் சில மாதங்களுக்கு முன் இந்திய அதிகாரிகளுக்கும் இலங்கை அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்று பின்னர் சீன-இந்திய எல்லைத்தகராறு காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட இலங்கை-இந்திய பிரச்னை பற்றி பேச்சுவார்த்தையை புதுடில்லியில் தொடர்ந்து நடத்துவதற்கான நடவடிக்கைகளைப் பற்றி இந்திய காமன்வெல்த் உறவுக்காரியதரிசி திரு. வை. டி. கண்டேவியாவுடன் புதுடில்லி சென்ற இலங்கை பதில் ஹைகமிஷனர் திரு. டி. பொன்சேகா ஆலோசனை நடத்தி வருகிறார்.

எதிரிக்கு மரணதண்டனை

வவனியா கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் கடந்த நான்கு நாட்களாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வவனியா கொலை வழக்கில், நீதியரசர் நேற்று எதிரிக்கு தூக்குத்தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தார்.

1951-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் திகதி வவனியாவில் இராமசாமி வரதராசா செட்டியாரை மயில்வாகனம் சேனதிராசா என்பவர் கொலை செய்ததாகக் குற்றம்சாட்டி இவ் வழக்குத்தொடரப்பட்டிருந்தது

டாக்ஸிக்குள் 50 லட்சம் அரிசி

கூப்பன்கள்

கொழும்பு, வியாழன்

கள்ளக்கையொப்பமிடப்பட்டதாகசந்தேகிக்கபடும் சுமார் 50 லட்சம் பங்கீட்டரிசிப் புத்தகங்கள் ஒரு டாக்ஸியில் இருக்க கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மாபெரும் மோசடியை இன்று காலை வெலிகடை பொலிஸார் கண்டு பிடித்தனர்.

இது சம்பந்தமாக நால்வரைப் பொலிஸார் பாதுகாப்பில் வைத்துள்ளனர். சம்பந்தப்பட்ட டாக்ஸியும் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியருக்கு திறைசேரி புதிய உத்தரவு

சிங்களத் தேர்ச்சிபெற்றால் பழைய ஊழியருக்கு புது நியமனம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஊழியர் சம்பந்தமாக திறைசேரி புதிய உத்தரவொன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்க சேவையில் 1956-ம் ஆண்டுக்கு முன் சேர்ந்த பழைய அரசாங்க சேவையாளருக்கு 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து புதிய நியமனம் அளிக்கப்படும். இவர்கள் உரிய படி சிங்களத்தில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் புதிய நியமனம் அளிக்கப்படும்.

இப்பொழுதுள்ள சட்டப்படி சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டிய அவசியமில்லாத பழைய அரசாங்க ஊழியர்கள் அடுத்தவருடம் ஜனவரி மாதத்தில் புதிய நியமனம் பெற்றதும், மூன்று வருட காலத்துக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும்.

இது தான் திறைசேரி விடுத்துள்ள புதிய உத்தரவு.

விவேகானந்தர் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று காலை பத்து மணிக்கு விவேகானந்தர் நூற்றாண்டு விழா கொண்டாடப்படவிருக்கிறது. பல அறிஞர்கள் இவ்விழாவில் விவேகானந்தர் பற்றி உரை நிகழ்த்தவிருக்கிறார்கள்.

புதுடில்லி, மார்ச் 14

புதிய சிரியா அரசாங்கத்தை இந்திய அரசாங்கமும் அங்கீகரித்துவிட்டது. இச்செய்தி டமாஸ்கஸ்லிலுள்ள இந்திய தூதர் மூலம் சிரியாப் பிரதமர் அல்பிதாரிடமும் தெரிவிக்கப்பட்டது.

தாயார்-முதல் எதிரி

நேசம் பற்றி எனக்குத் தெரியும்

கோயில் ஐயர் கொலைவழக்கில் மகள் ராஜலட்சுமி சாட்சியம்

சாவகச்சேரி, வெள்ளி

"முதலாவது எதிரியும் எனது தாயாரும் சிநேகிதம் என்பது எனக்குத் தெரியும். என்தாயாரும் தகப்பனரும் அடிக்கடி சண்டைபிடிப்பார்கள். ஆனால் இச்சண்டை எதிரி–தாயார் சிநேகிதத்தால் உண்டானதோ ஏன்று எனக்குத் தெரியாது".

இவ்வாறு சாவகச்சேரி கோர்ட்டில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் நேற்று உருத்திரபுரம் கோயில் ஐயர் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, காலஞ்சென்ற ஐயரின் 14 வயதுள்ள மகள் ராஜலட்சுமி சாட்சியமளிக்கும் போது கூறினர்.

62-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் தேதி காசிலிங்கசர்மாவை முத்தர் வேலுப்பிள்ளை, ஆர். பசுபதி, கோகிலாம்பாள் ஆகியோர் கொலைசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் திரு. ரி. கணேசலிங்கம் திரு. ஆர். டீ. சிவகுரு, திரு. செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார் 3-வது எதிரி கோகிலாம்பாள் சார்பில் எவரும் ஆஜராகவில்லை. கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை வழக்கை நடத்துகிறார்.

காலஞ்சென்ற ஐயரின் தகப்பனார், மகள் ராஜலட்சுமி, முதலாவது எதிரி வேலுப்பிள்ளையின் மனைவி பொன்னம்மா, மற்றும் சாட்சிகள் கோர்ட்டிற்கு நேரத்தோடு வந்திருந்தார்கள். 1-வது எதிரியின் மனைவி பொன்னம்மாவும், ராஜலட்சுமியும் மிகவும் நெருங்கிக் கதைத்துச் சிரித்தபடியிருந்தார்கள்.

எதிரிகளின் முகத்தில் இன்று புன்சிரிப்பு காணப்பட்டது கோர்ட்டிற்குள் எதிரிகள் வந்ததும், பொன்னம்மா தனது வலதுகையால் வாயைப் பொத்திச் சிரித்துக்கொண்டார். பொன்னம்மா அடிக்கடி எதிரிகள் இருந்த கூண்டைநோக்கி கடைக்கண்ணால் பார்த்து அருகேயிருந்த ராஜலட்சுமியிடம் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

பச்சைக்கோடிட்ட வெள்ளைச் சேலையும், அதற்கேற்ற சிவப்புச் சட்டையும் அணிந்து கோகிலாம்பாள் கோர்ட்டிற்குள் நுழைந்தபோது பரபரப்பு ஏற்பட்டது. கோகிலாம்பாளும் மகளும் ஒருதடவை நேருக்கு நேர் பார்த்துக் கொண்டபோது கோகிலாம்பாளின் முகத்தில் எதுவிதமாறுதலும் ஏற்படவில்லை.

ராஜலட்சுமி தொடர்ந்து சாட்சியமளித்தபோது கூறியதாவது.

14-12-62-ல் எனது பேரனிடமிருந்து எங்களைக் கூட்டிவரும்படி எனது தகப்பனாருக்குக் கடிதம் வந்தது. பணமில்லாததடியால் நாங்கள் போகவில்லை. அன்று மாலை ஐந்தரை மணிக்கு தகப்பனார் கோவிலில் பூசை செய்தார். இடையிடையே தகப்பனார் கள்ளுக்குடிப்பது வழக்கம். 1-வது எதிரி வேலுப்பிள்ளை கள்ளுக் கொண்டுவருவார். அன்று 6 மணியளவில் தகரத்தில் கள்ளு இருப்பது கண்டேன். யார் கொண்டுவந்தது என்று தெரியாது. சற்றுநேரத்தின்பின் 1-வது எதிரி ஒரு போத்தல் கள்ளுகொண்டு வந்து தாயாரிடம் கொடுத்தார். தாயார் தகப்பனாரிடம் கொடுக்க அவர் குடித்தார். 1-வது, 2-வது எதிரிகள் வெளியில் கள்ளுக்குடித்துக் கொண்டிருந்தார்கள். தகப்பனாருடன் சேர்ந்து குடிக்கவில்லை.

அன்று இரவு நானும் சகோ

(8-ம் பக்கம் பார்க்க)

காஷ்மீர்

கல்கத்தா பேச்சில் திருப்தியில்லை

கல்கத்தா, மார்ச் 14

காஷ்மீர் சம்பந்தமாக 5-வது சுற்று மகாநாடு ஒன்று கராச்சியில் நடைபெறலாம் என அறிவிக்கப்படுகிறது. கல்கத்தா சம்பாஷணையில், இருநாடுகளுக்குமிடையே உள்ள அபிப்பிராய பேதம்எந்த வகையிலும் குறைந்ததாகத் தெரியவில்லை எனக் கருதப்படுகிறது.

அரசாங்க விளம்பரம் வவுனியா கச்சேரி

என் 533- வவுனியாப் பட்டண எல்லைக்குள் இருக்கும் முடிக்குரிய 48 கால் ஏக்கரைக் கொண்ட பூமித்துண்டுகளின் குத்தகையை 1963-ம் ஆண்டு மே மாதம் 20-ந் திகதி காலை 10 மணியளவில் வவுனியாக் கச்சேரியில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். மறுவிபரங்களுக்கு 15-3-63-ந் திகதியைக் கொண்ட அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

வரி விளம்பரம்

தேவை

எமது தயாரிப்புகளை சயிக்கிள்களில் சென்று விற்பனை செய்ய ஆட்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். வினாயகம் இன்டஸ்றீஸ், 39 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 762

தேவை

சாப்பாட்டுக் கடைக்கு அனுபவம் உள்ள ஒரு சமையற்காரனும் இரண்டு பரிமாறக் கூடிய டையன்களும் (15—20 வயதுடைய) தேவை. 23-3-63 சனிக்கிழமைக்கிடையில் 23, பழம் றோட் கந்தர்மடம் என்ற விலாசத்திற்கு நேரில் வந்து சந்திக்கவும். 770

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

B. S. A. 2.5 EY உடன் விற்பனைக்கு. 16. சிவன்பண்ணை ரோட், கொட்டடி, யாழ்ப்பாணம். 769

விற்பனைக்கு

10 அந்தர் டிலிவரி வான் 33 ஸ்ரீ 1601. நல்ல நிலைமையில் விற்பனைக்கு உண்டு. மில்க் வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 771

தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு

மட்டக்களப்பு, கல்முனையில் பிரதான வீதியில் பிரபலமான ஒரு ஹோட்டல் சகல தளபாட சாமான்களுடனும், விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு தயாராக இருக்கின்றது. கீழ்க் கண்ட விலாசத்திற்கு நேரில் அல்லது தபால் மூலம் விண்ணப்பிக்கவும். சி. மா. பாலசிங்கம், ஆடியபாத றோட், தம்பு வைத்தியசாலை, நல்லூர் யாழ்ப்பாணம். 772

"தொழிலில் உயர்வுதாழ்வு பார்க்கக்கூடாது"

விவேகானந்தர் விழாவில் பிரேமாத்மானந்தஜி பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

"மனிதன் பூரணத்துவமடையக் கற்கவேண்டும். கற்றதன் பின் எந்த வேலைகளையும் செய்யத்தயாராகவேண்டும். தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை என்று எண்ணும்போதுதான் நாடு முன்னேறும்" என்று சுவாமிபிரேமாத்மானந்தாயாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில் நடைபெற்ற விவேகானந்தர் விழாவில் பேசுகையில் கூறினார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி இந்து மாணவர் மன்ற ஆதரவில் கல்லூரி அதிபர் திரு. ஏ. ஈ தம்பர் தலைமையில் விவேகானந்தர் நூற்றாண்டுவிழா நடைபெற்றது.

திரு. தம்பர் பேசுகையில், இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு சுவாமி விவேகானந்தர் ஆற்றிய பணியை நினைவுகூரவேண்டுமென்றும், இந்தியாவைப் புண்ணியபூமி என்று அழைப்பது சுவாமி விவேகானந்தர் போன்ற ஞானிகள் காலத்திற்குக் காலம் அங்கு தோன்றுவதே காரணமாகுமென்றும் கூறினார்.

சுவாமி பிரேமாத்மானந்தா பேசுகையில் கூறியதாவது:—

கல்லூரி மண்டபத்தை வந்தடைந்ததும் கல்லூரியின் பழைய நினைவுகள் மனத்தில் எழுகின்றன. இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த மேல் நாட்டு, கீழ்நாட்டுக் கல்விமான்களின் சேவை பாராட்டத்தக்கது. மாணவனாயிருந்த காலத்தில் ஆங்கிலம் படித்தவர்கள் எல்லாருக்கும் இலங்கை, சிங்கப்பூர் போன்ற இடங்களில் உத்தியோகங்கள் இலகுவாகக் கிடைத்தன. இப்போது அந்நிலை மாறிவிட்டது இப்போது கல்வியை, சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல் மனிதன் பூரணமடையக் கற்கவேண்டும். அதன்பின் கிடைக்கக்கூடிய எந்தவேலைகளையும் செய்ய வாலிபர் தயாராக இருக்கவேண்டும். வேலையில் சிறுமை பெருமை பார்க்கக் கூடாது. இவ்வாறு செய்வதன் மூலமே நாடு உய்யமுடியும். மேலும் விவேகானந்தரின் முக்கிய போதனையான சமரசசன்மார்க்கத்தையும் கற்கவேண்டும்.

சுவாமி ரங்கனானந்தஜி பேசுகையில், சுவாமி விவேகானந்தரின் தோற்றத்தின் சிறப்பையும், கல்வியின் பரப்பையும் எடுத்துக்கூறினார். அவர் மேலும் அவருக்கு இருந்த ஆத்மீக தாகத்தையும், ஆத்மீக தாகம் ராமகிருஷ்ணரின் சந்திப்பினால் தீர்ந்ததனையும் விளக்கினார். சிவனே விவேகானந்தரின் இஷ்டமூர்த்தி. அதனால் அவர் தியாகத்திற்கு இருப்பிடமாக விளங்கினார். யாழ்ப்பாணம், சுவாமி விவேகானந்தர் விஜயஞ்செய்துள்ளமையால் இங்கு அவரது நூற்றாண்டுவிழாவைக் கொண்டாட வேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர் திரு. வி. குமரேசன் நன்றி கூறினார்.

ரூ. 250 அபராதம்

பருத்தித்துறை, புதன்

வல்லை உப்பு றோட்டில் 143 போத்தல் சாராயத்தை உத்வரவின்றி கொண்டுசென்றதாக பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் சாராயத்தை பறிமுதலாக்கியதுடன் குற்றத்தை ஒப்புக்கொண்ட 1-ம் எதிரியாகிய வல்வெட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை நல்லையாவுக்கு 250 ரூபாய் அபராதம் விதித்தார். 2-ம் எதிரியான சங்கானையைச் சேர்ந்த சண்முகம் சபாரட்ணம் விடுதலை செய்யப்பட்டார்.

ஆயுதம் தரித்த கொள்ளைக்கோஷ்டி

கம்பளையில் கைது

கம்பளை, வியாழன்

ஜீப் வண்டியொன்றில் சென்றுகொண்டிருந்த ஆயுதம் தரித்த ஒரு கொள்ளை கோஷ்டியை கம்பளை பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் அல்பிரட் திசர கைது செய்துள்ளார். கொள்ளை கோஷ்டியினர் கம்பளையில் கைது செய்யப்பட்டனர்.

மிகுந்த கஷ்டத்துக்குப் பின்னர் இந்தக் கொள்ளை கோஷ்டியைச் சேர்ந்த ஏழு பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்களிடம்; தானாகவியங்கும் சுழல் துப்பாக்கி, ஆயுதங்கள், பிஸ்டல், கைகளுக்கு அணியும் பருத்தி உறைகள், ரப்பர் முகமூடிகள் ஆகியவை இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் காரொன்றில் துரத்திச் சென்றதன் பின்னர் இக்கொள்ளை கோஷ்டியினர் கைதுசெய்யப்பட்டனர். கான்ஸ்டபிள்களான கருணாரத்ன, குணதிலகா ஆகியோரின் உதவியுடன் இன்ஸ்பெக்டர் அல்பிரட், அக்கொள்ளை கோஷ்டியினரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்.

கம்பளை கோர்ட்டுக்கு அவர்கள் கொண்டுவரப்பட்ட சமயம், அங்கு ஏராளமானவர்கள் குழுமிநின்றனர். பாமன் கடையைச் சேர்ந்த எம். பியதாஸா, ராஜகிரியைச் சேர்ந்த விதானகே நியூட்டன், கிரிலப்பனையைச் சேர்ந்த பாலசூரியா, பொரளையைச் சேர்ந்த துடுஹினகே நிதாயஸ் சிங்கோ, மருதானையைச் சேர்ந்த திஸ்நாயக்கா சுகததாச, மாவத்தையைச் சேர்ந்த மொகமட் கபீர், ராஜகிரியைச் சேர்ந்த வெறதன்திறிஜி ஆகியோர் கைதுசெய்யப்பட்ட நபர்களாகும்.

கம்பளை மாஜிஸ்டிரேட் திரு. ஓ. எஸ். எம். செனிவரத்ன, இந்நபர்களை இம்மாதம் 25-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

வாக்காளர் பட்டியல்

தர்மபுரத்தில் இன்று விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

தர்மபுரம் வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படாமை பற்றிய ஆட்சேபங்களை வடபகுதித்தேர்தல் அதிகாரி இன்று தர்மபுரத்தில் விசாரிப்பார் என்று தெரிகிறது.

அவர்களது ஆட்சேபங்களை விசாரிப்பதற்கு இம் மாதம் 13, 15, 18-ம் திகதிகள் ஒதுக்கப்பட்டிருந்ததாயினும், ஆட்சேபம் கிளப்பியவர்களின் சார்பில் வாதாடவிருந்த திரு. ஸி. சுந்தரலிங்கம் கேட்டதற்கிணங்க விசாரணை இன்று நடைபெறுமெனத் தெரிகிறது.

ஆலயங்களில் திருமணம்

பக்தவத்சலம் விளக்கம்

சென்னை, மார்ச். 13

ஆலயங்களில் திருமணவிழா நடத்தும் முறையைப்பற்றி, தமிழ்நாடு நிதிமந்திரி எம். பக்தவத்சலம் பின்வருமாறு விளக்கம் தந்துள்ளார்:

மணமகனும் மகளும் அம்மன் சந்நிதியிலுள்ள அர்த்த மண்டபத்தில் நிற்பார்ள். திருமாங்கல்யத்தை அம்பாளின் திருவடியில்வைத்து, அம்பாளுக்கு அர்ச்சனை செய்யப்படும். தீபாராதனை ஆனதும் அர்ச்சகர் திருமாங்கல்யத்தை எடுத்துவந்து மணமகனின் கையில் கொடுக்க மணமகன் அதனை மணமகள் கழுத்தில் சூட்டுவார். அதன் பின் மணமக்கள் ஒருவருக்கொருவர் மலர்மாலை அணிவர். மாலை மாற்று முடிந்ததும் மணமக்கள் அம்பாளகோயிலை வலம் வருவர். இக கிரியைகளின் பின், திருமணத்திற்கு வந்தோர் அனைவரும் ஆலய மண்டபத்தில் அமைதியாயிருப்பர். அவர்கட்கு சந்தனம் வெற்றிலைபாக்கு வழங்கப்படும்.

சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம் சைவப்புலவர் புகுமுக வகுப்பு, இளம் சைவப்புலவர் வகுப்பு என்பனவற்றை புதுவருஷத்தைத் தொடர்ந்து ஆரம்பிக்க விருப்பதாக அறிவித்துள்ளது. வண்ணை நாவலர் வித்தியாயயத்தில் இவ்வகுப்பு ஆரம்பமாகி நடைபெறுமெனவும், மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என்றும அறிவிக்கப்பட்டுள்ளது.

"கடன் உதவியளிக்க மாகாணவங்கிதவறினால் கலைத்து விடத்தயங்கேன்"

என்கிறார் மந்திரி

பாணந்துறை, புதன்

"தேவையான நிதி உதவியைக் கூட்டுறவுச்சங்கங்களுக்கு உடனடியாகக் கொடுத்து உதவ வசதிசெய்ய கூட்டுறவு மாகாண வங்கிகள் தவறினால், மாகாண வங்கியைக் கலைத்து விட்டு அதன் வேலைகளை மக்கள் வங்கியிடம் ஒப்படைக்கத் தயங்கமாட்டேன்" என்று உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினா வலனா என்ற இடத்தில் பாணந்துறை மோட்டார் அமைப்பு கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தில் புதிய தளபாடப் பகுதியைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு நிதி உதவி அளிப்பதற்கு மறுத்ததன்மூலம் சங்கத்தின் வேலைகளுக்கு மாகாண வங்கி இடையூறு செய்ததாகவும் மாகாண வங்கியை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. லயனல் பெர்னான்டோ இதற்கு முன்னர் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. இலங்கரத்தினா மேலும் பேசுகையில், முதலாளித்துவம், பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவைகளை ஒழித்து அதற்குப் பதிலாக முதலாளி தொழிலாளி வேறுபாடில்லாத ஒரே மூலதனத்தில் நடைபெறக்கூடிய கூட்டுறவு அமைப்பிடம் ஒப்படைப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்றார்.

கேள்விப்பத்திரங்கள் கோராமல் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கான 'கொந்தராத்து' வேலைகளை கூட்டுறவுச் சங்கங்களிடம் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒழுங்குசெய்துள்ளதென்றும் இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்வது கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்திருக்கிறதென்றும் மந்திரி இலங்கரத்தினா கூறினார்.

பாணந்துறை எம். பி. திரு. லெஸ்லி குணவர்த்தனாவும் பேசினார்,

இளைஞர் தற்கொலை

வேலணை, வியாழன்

வேலணை வடக்கைச் சேர்ந்த கந்தையாவின் மகனான நடராசா என்னும் இருபத்தி நான்கு வயது இளைஞர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார். மரண விசாரணையின் போது தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. சில நாட்களாகக் காலஞ்சென்றவர் வாழ்க்கையில் அதிருப்தி கொண்டு தற்கொலை செய்துகொள்ளப் போவதாகப் பலமுறை கூறியிருந்ததாகத்தெரிகிறது.

சாராயம் விற்றதாக வழக்கு

ரூ. 200 அபராதம்

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சந்திரசேகரம் என்பவர்மீது உத்தரவின்றி சாராயம் விற்றதாக பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் எதிரிக்கு ரூபா 200 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

நகரசபை தேர்தல்

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு நகரசபைத் தேர்தல்கள் ஜூன் மாதத்தில் நடைபெறும்.

தேவை

18 வயதுக்குட்பட்ட ஆண், பெண் தொழிலாளர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். கலாசோதி இன்டஸ்றீஸ், றப்பர் சீல் செய்பவர்கள் பழைய பஸ்ஸ்ரான்ட், 160, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 773

யாழ்நகர் கஷ்ட நிவாரண பாதுகாப்புச் சங்கம், லிமிற்ரெட், 4, கண்டிறோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
[அரசாங்க ப்பதிவு இலக்கம் எம். 110]

விசேஷ அறிவித்தல்

சங்கத்தின் அங்கத்தவர்களாயிருந்து குற்றமடைந்து விலத்தப்பட்டோரும் அங்கத்தவரல்லாத இதன் விரோதிகளும் சங்கம் வீழ்ச்சியடைந்து விட்டதாகப் பொய்ப்பிரசாரஞ் செய்கின்றனர். அவர்களின் பொய் வார்த்தையை நம்பி மோசமடையாமல் மாதாவீதம் கிரமமாகப் பாக்கியைச் செலுத்தத் தவறின் இதுவரை செலுத்திய பணத்தையுமிழந்து அங்கத்தவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு அந்த இடத்திற்கு ஓர் புது அங்கத்தவரைச் சேர்க்கப்படும்.

27-1-63 முதல் 9-3-63வரை காலகதியடைந்தோர்:

காலகதியடைந்தவர் இலக்.	பெயர் விலாசம்	திகதி
1754 கு. சுப்புறுமணியம்,	37/6 மாட்டீன் றோட்	27-1-63
2333/131 ம. சூசானம்மா	8/1 மாட்டீன் றோட் லேன்	1-2-63
495 அ. மரியம்மா	13-ம் காணி குமரபுரம் பரந்தன்	20-2-63
1972 நா. சின்னம்மா	சந்தையடி தொல்புரம் சுளிபுரம்	2-3-63
366 ஆ. சின்னப்பிள்ளை	37/6 மாட்டீன்றோட் யாழ்ப்பாணம்	4-3-63
2569 வே. கதிராசி	தலைமன்கலட்டி தெல்லிப்பளை	5-3-6
1953 அ. றெ. செல்லம்மா	றெயில்வே ஸ்ரேசன் மாஸ்ரர் சிலாபம்	9-3-63

காரியதரிசி:- சி. கந்தையா

768

மீன்பிடிக் கப்பலை அமெரிக்கா தாக்கியதாம்
ரஷ்யா குற்றச்சாட்டு

மாஸ்கோ, மார்ச் 14

வேர்ஜீனியா கடலில் ஒரு சோவியத் மீன்பிடிக்கப்பலை மூன்று அமெரிக்க யுத்தக் கப்பல்கள் தாக்கியதாக சோவியத் யூனியன், அமெரிக்காமீது குற்றம்சாட்டியுள்ளது.

இம்மாதம் எட்டாம் திகதி வேர்ஜீனியா கடலிலிருந்த குளிர்சாதன சோவியத் மீன்பிடிக் கப்பலொன்றை அமெரிக்க யுத்தக்கப்பல்கள் மூன்று தாக்கியதென்றும், மீன்பிடிக் கப்பல்மீது அமெரிக்க கப்பல்கள் மூன்று தடவைகள் சுட்டதாகவும் சோவியத் யூனியன் அமெரிக்காமீது குற்றம் சுமத்தியுள்ளது.

கடந்த இரவு வெளியான சோவியத் அரசாங்க பத்திரிகை இதுசம்பந்தமான விபரத்தை வெளியிட்டிருக்கிறது.

இதுசம்பந்தமாக சோவியத் அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்திருப்பதாவது:-

"சோவியத் கப்பல்களைப் பின்தொடருவது அமெரிக்காவின் வழக்கமாகிவிட்டது. கடந்த வருடம்மட்டும் சோவியத் கப்பல்களுக்கு மேலாக 1,600 தடவைகள் அமெரிக்க விமானங்கள் பறந்திருக்கின்றன. 75 தடவைகளில் பின்தொடர்ந்திருக்கின்றன. சில சமயங்களில், 100 அடி தூரத்தில் வெகு பணிவாக சோவியத் கப்பல்களை அமெரிக்க நேட்டோ விமானங்கள் பின்தொடர்ந்திருக்கின்றன.

பசுபிக்கடலிலும், அத்லாந்திக்கடலிலும் செல்லும் சோவியத் கப்பல்களை அமெரிக்க விமானங்கள் பின்தொடர்ந்திருக்கின்றன. ஒரு கப்பலுக்கு இரு நேட்டோ விமானங்கள் வீதம் சோவியத் கப்பல்களை அமெரிக்கா பின்தொடர்ந்திருக்கிறது.

சோவியத் மீன்பிடிக் கப்பலைத் தாக்கியதாக அமெரிக்கா மீது சுமத்தியிருக்கும் குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை செய்யப்படும் என்று அமெரிக்க ராஜாங்க காரியதரிசி அறிவித்துள்ளார். ஆனால் அமெரிக்க பாதுகாப்பு இலாகா எந்த விதமான அபிப்பிராயமும் வெளியிடவில்லை.

'நம்மை நாமே வலுப்படுத்த வேண்டும்'
—பிரதமர் நேரு

'சீனா எப்போதும் தாக்கலாம்'

போபால், மார்ச் 14

'சீன—இந்திய எல்லைத் தகராற்றினால் பாரதத்தில் தோன்றியிருக்கும் இக்கட்டான நிலைமைகளைச் சமாளிப்பதற்கு, நாட்டு மக்கள் கடினமாக உழைக்கவேண்டும்' என்று போபாலில் கிராமத்தொண்டர் கூட்டமொன்றில் பாரதப் பிரதமர் நேரு பேசுகையில் கூறினார்.

பாரதப் பிரதமர் தொடர்ந்து பேசுகையில், மக்களினது கடினமான, அயராத உழைப்புத்தான் பாரதத்துக்கு இப்பொழுது தேவைப்படுகிறதென்றும், நம்மை நாமே வலுப்படுத்திக்கொள்வதற்கு நாம் ஆக்கவேலைகளில் அயராது பாடுபடவேண்டுமென்றும் கூறினார்.

சீனாவின் சவாலை பாரதம் ஏற்றிருக்கிறது. ஏற்ற சவாலை நாம் எதிர்த்து நின்று போராடவேண்டும். நமக்கு வந்திருக்கும் இந்த எல்லைச் சவாலில் வெற்றிகாணவேண்டும் என்றும் அவர் கூறினார்.

சீனாவின் அடுத்த தாக்குதல் எப்போது நடைபெறும் என்று சொல்லமுடியாதுஎன்றுகூறிய நேரு, நாட்டையும் மக்களையும் வலுப்படுத்தவேண்டிய பொறுப்புணர்ச்சி மக்களின் மனதில் தோன்றியிருக்கிறது. வெற்றி நமதே என்றும் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: "மக்கள்மீது அதிகமான வரிகள் சுமத்தப்பட்டிருப்பதாகச் சிலர் கூறலாம். அது தவறு. எந்த அரசாங்கமும், காரணம் இல்லாது மக்கள்மீது வரி களைச்சுமத்தாது. நமக்கு இது ஒரு சோதனைகாலம். நமது வாழ்வுக்கே சவால் வந்திருக்கிறது. இந்தவேளையில் நாம் மனம் தளராமல், மனஉறுதியுடன் கடினமாக வேலைசெயய வேண்டும். உற்பத்தி பெருகுவதற்கான ஆக்கவேலைகளை நாம செய்யவேண்டும்.

தேசம் முழுவதும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். தேசிய நிதிக்காக யாரையும் கட்டாயப்படுத்தி பணம் சேகரிக்கக்கூடாது.

பாரத-பாக். பேச்சுக்கள்
தொடர்ந்து நடைபெறுகிறது

கல்கத்தா, மார்ச் 14

காஷ்மீர் பற்றியும் அது சம்பந்தமான மற்ற விஷயங்கள் பற்றியும் பாரத-பாகிஸ்தான் அதிகாரிகளுக்கிடையே நேற்று தெடர்ந்தும் பேச்சுவார்த்தைநடைபெற்றபொழுது பாகிஸ்தான் சீனவுடன் கொண்டுள்ள எல்லை ஒப்பந்தம் பற்றி முக்கியமாகக் குறிப்பிடப்பட்டது. பேச்சுவார்த்தைகள் இன்று தொடர்ந்தும் நடைபெறும்.

பாகிஸ்தான்-பாரத அதிகாரிகளுக்கிடையே நேற்று இரண்டுதடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. காலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுக்கள் இடம் பெற்றன. மாலையில் நடைபெற்ற பேச்சுகளின் போது காஷ்மீர் குறித்து பேச்சுக்கள் நடைபெற்றன.

காலையில் நடைபெற்ற பேச்சுக்களில் இந்திய கோஷ்டியின் தலைவருடன் இரண்டு ஆலோசகர்களும் பாக். கோஷ்டிதலைவருடன் இரண்டு ஆலோசகர்களு மிருந்தார்கள். மாலையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இரு கோஷ்டிகளிலும் மும்மூன்று ஆலோசகர்கள கலந்து கொண்டனர்.

நேற்றிரவு பாரத கோஷ்டி தலைவர் திரு. சுவர்ண்சிங், பாகிஸ்தான் கோஷ்டித் தலைவர் திரு. புட்டோவுக்கு இரவு விருந்தொன்றை அளித்தார்.

—

பிரான்ஸ் அங்கீகாரம்

லண்டன், மார்ச் 14

புதிய லிரியா அரசாங்கத்தை பிரான்சும் அங்கீகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டீன்ரஸ்க் புதுடில்லி வருவார்

புதுடில்லி, மார்ச் 14

அமெரிக்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க் மே மாதம் 2-ம் திகதி புதுடில்லிக்கு விஜயம் செய்வார்.

—

புதிய ஏற்பாடுகள்

ஜம்மு, மார்ச் 14

உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் முறையில் பல ஏற்பாடுகளையும் செய்ய ஜம்மு—காஷ்மீர் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. பூந்தோட்டங்களை அமைக்கவும், இளைஞர்களுக்கான ஹோட்டல்களை நிறுவவும் ஜம்மு—காஷ்மீர் அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

—

ராதாகிருஷ்ணன் ஈரான் செல்வார்

புதுடில்லி, மார்ச் 14

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், மே மாதம் 16-ம் திகதி ஈரானுக்கு விஜயம் செய்வார். ஈரான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் அங்கு செல்லவிருக்கிறார். ஈரானில் அவர் மே மாதம் 21-ம் திகதி வரை தங்கியிருப்பார் எனத் தெரிகிறது.

சீனப் பிரதேசத்தில் இந்தியா ஊடுருவலாம்!
இந்தியாவுக்கு சீனா ஆட்சேபம்

பீக்கிங், மார்ச் 14

திபெத் பகுதியில் ஸ்பாங்பூர் நதிப்பகுதியில் இந்தியத் துருப்புக்கள் 'ஊடுருவல்' 'செய்துள்ளதை'க் கடுமையாக ஆட்சேபித்து இந்திய அரசாங்கத்துக்கு சீன அரசாங்கம் ஆட்சேபக் குறிப்பொன்றை அனுப்பியுள்ளது. இக்குறிப்பு பீக்கிங்கிலுள்ள இந்திய தூதரகாலயத்திடம் கொடுக்கப்பட்டது. இத்தகவலை நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

பெப்ரவரி மாதம் ஏழாந் திகதியக் குறிப்புக்கு இந்தியா அளித்த பதிலில் இதுசம்பந்தமான உண்மைகளை அவசரமாக மறுத்தது மட்டுமல்லாது இந்தியாமீது சீனா ஆக்கிரமிப்புச் செய்திருப்பதாக வேண்டுமென்றே சீனாமீது குற்றஞ்சாட்டியுள்ளது என்று செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

சீனா தெரிவிக்கும் நியாயமான, வன்மையான ஆட்சேபங்களை ஆக்கிரமிப்புக்கு ஆயத்தம் செய்யும் நடவடிக்கையென இந்தியா கண்டுபிடிப்புச் செய்து குற்றம்சாட்டுகிறதென்றும் சீனக் குறிப்புக் கூறுகிறது.

"யுத்தநிறுத்தத்தைசெயலில் நிறைவேற்றி தனது துருப்புக்களையும் சீனா வாபஸ் பெற்றுள்ளது. எல்லைத் தகராறுக்குச் சமரசத் தீர்வுகாணுமுகமாக சீனா தாமாகவே போர்நிறுத்தம் செய்து துருப்புக்களையும் வாபஸ் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து ஊடுருவலை செய்து கொண்டும் சீன எல்லைக் காவல் முன்னணித் துருப்புக்கள் வாபஸ் பெற்ற இடங்களுக்கு முன்னேறி வந்து கொண்டுமிருக்கும் இந்தியர்தான் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கின்றனர் என்று செய்தி ஸ்தாபனம் கூறியது.

சீனரின் போர் நிறுத்தத்தை மீற வேண்டாமென்றும் சீனத் துருப்புக்கள் வாபஸான பகுதிக்கு இந்தியத் துருப்புக்கள் பிரவேசிக்கக் கூடாதென்று உத்தரவிடப்பட்டுள்ளதாக இந்தியா தனது குறிப்பில் தெரிவித்திருந்ததாகவும் ஆனால் அந்தக் குறிப்பின் பின்னர் இந்தியத் துருப்புக்கள் திபெத்தின் ஸ்பாங்கூன் நதிப்பகுதியில் நான்கு தடவைகள் எல்லையைக் கடந்து சீனப் பிரதேசத்துக்குள் ஊடுருவல் செய்துள்ளனர் என்று சீனக் குறிப்புக் கூறுகிறது. பெப்ரவரி 11-ந் திகதியிலிருந்து 14-ந் திகதிவரை நான்கு தடவைகள் இந்தியர் ஊடுருவல் செய்துள்ளதாகத் தெரிவிக்கும் அந்தக் குறிப்பு நான்கு 'சம்பவங்களை'யும் குறிப்பிட்டுள்ளது.

—

சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை
சமாஜம் கோரிக்கை

சுழிபுரம், வியாழன்

"யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்குக் கடந்த இரு வருடங்களாக அரசினர் நன்கொடைப் பணவுதவி கிடைக்காமை குறித்து இச்சபைபெரிதும் வருந்துகின்றது. வடபகுதியிலுள்ள ஏனைய சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று எவ்வித பாரபட்சமுமின்றி மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அரசினர் நன்கொடைப் பணவுதவி கிடைக்க ஆவன செய்யுமாறு இச்சபை உள்ளூராட்சி அமைச்சரையும், உள்ளூராட்சி உதவி ஆணையாளரையும் கேட்டுக் கொள்கின்றது" என்னும் தீர்மானம் அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட சனசமூகநிலையங்களின் சமாஜ செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிற்று.

சமாஜத் தலைவர் இராசவாசல் முதலியார் சி. தியாகராசா இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சமாஜச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் உட்படப் பலர் இதுபற்றிப் பேசினர்.

—

கனகபுரத்தில் வள்ளுவர் விழா

கிளிநொச்சி, புதன்

மேலைத் தேசங்களின் விஞ்ஞான முறைகளைக் காட்டி, கீழைத்தேசங்களின் தெய்வீகத் தத்துவங்களை குறைகூறுவது வருந்தத்தக்கது. விஞ்ஞானம் மிகவும் உச்சநிலைக்கு வளர்ந்துவிட்டபோதிலும் மேலைத் தேசங்களில் மனிதன் நிம்மதியின்றி அலைகிறான். பல நெருக்கடிகளுக்கிடையிலும் பாரதம் பல நாடுகள் அமைதியாக வளர்ச்சியடைகின்றன. இவ்வாறு கிளிநொச்சி திருநெறிக் கழகக் காரியதரிசி திரு. தா. நல்லதம்பி கனகபுரம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் நடைபெற்ற "வள்ளுவர்" விழாவில் பேசும்போது கூறினர். கூட்டத்திற்கு திரு. ந. சோதிகரன் தலைமை தாங்கினர்.

—

லாவோஸ் மன்னர்

வியன்டைன், மார்ச் 14

லாவோஸ் மன்னர், லாவோஸ் ஒப்பந்த நாடுகளுக்கு விஜயம் செய்து விட்டு தாயகம் திரும்பினர்.

ரஷ்ய பிரதமருக்கு பீக்கிங் அழைப்பு!
கட்சிப் பிளவுகளை நீக்க பேச்சுவார்த்தை

பீக்கிங், மார்ச் 14

சீன-சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் கொள்கை வேறுபாடுகளை நீக்கும்பொருட்டு, பீக்கிங்குக்கு விஜயம் செய்யுமாறு ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவை சீன கம்யூனிஸ்ட் கட்சி அழைத்துள்ளது.

சீன-கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே ஏற்பட்டிருக்கும் கருத்துவேற்றுமைகளை களைந்தெறியும் பொருட்டு பேச்சுவார்த்தைகளை நடத்த சீனா ஒழுங்குகள் செய்துவருகிறதென்றும், இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் பொருட்டு பீக்கிங்குக்கு விஜயம் செய்யுமாறும் சீன கம்யூனிஸ்ட் கட்சி ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவுக்கு ஓர் அழைப்பு விடுத்திருக்கிறது.

கட்சிகளுக்கிடையேயிருக்கும் கருத்து வேறுபாடுகளை நீக்கும் பொருட்டு நடைபெறும் பேச்சுவார்த்தைகளின்போது கலந்துகொள்வதற்கு பிரதமர் குருஷ்சேவுக்கு வசதிக்குறைவாகக் காணப்பட்டால், உயர் சோவியத் அதிகாரி ஒருவரை அனுப்பிவைக்கும்படியும் சீனா கேட்டுள்ளது.

இதுசம்பந்தமான செய்தியொன்றை, நவசீன செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கிறது.

சோவியத் பிரதமரோ அல்லது உயர் அதிகாரியோ சீனாவுக்கு விஜயம் செய்ய சந்தர்ப்பமில்லாவிட்டால், சீன தூதுக்குழுவொன்று ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமென்றும் சீன கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்திருக்கிறது.

சீனாவைத் தாக்கும்வகையில் சோவியத்யூனியன் வெளியிட்ட கண்னங்கள் சம்பந்தமாக பகிரங்கமாகப் பதிலளிக்கும் நடவடிக்கையை கைவிடுவதென்றும் இரு நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே தோன்றிய அபிப்பிராய பேதங்களை நீக்கும் முயற்சியில் ஈடுபடுவதென்றும் சீனா முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

சீன-சோவியத்யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே தோன்றிய கருத்துவேறுபாடுகள் சம்பந்தமான சோவியத்-சீன பேச்சுவார்த்தைகள் எப்போது எங்கு நடைபெறும் என்பது இன்னும் நிச்சயிக்கப்படவில்லை.

—

ராஜீய தொடர்புகள்

லண்டன மார்ச், 14

இந்தோனேஷியாவுக்கும் ஒல்லாந்துக்குமிடையே மீண்டும் ராஜீய தொடர்புகள் ஏற்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

மணி வாக்கு

தன் மனச்சாட்சிக்கு மாறுக நடக்கும் ஒரு தலைவர் உதவாக்கரையான வர். தனக்கு வழிகாட்டியும், தன்னை உறுதியுடன் இருக்கச் செய்யவும் அந்தராத்மா அவருக்கு இல்லாவிட்டால், நங்கூரமில்லாத கப்பல் போல அவர் பலர் பேச்சையும் கேட்டு அலைபடுவார்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELANADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 2 உ (15-3-63)

தொழிற்சங்க கூட்டுப் பேச்சு

தொழிலாளரின் சம்பளம், வேலைநிறுத்த உரிமை முதலிய முக்கிய விஷயங்கள் பற்றி இலங்கையிலுள்ள ஏழு பெரிய தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகள் கொழும்பில் நேற்றுக் கூடி ஆலோசித்ததாக ஒரு செய்தி கூறுகிறது. மொத்தம் சுமார் 9 லட்சம் தொழிலாளருக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் யூனியன்கள் இதில் கலந்து கொள்கின்றனவாம். தொழிலாளர் நன்மையில் கருத்துக் கொண்ட எல்லா யூனியன்களும் இப்படி கூட்டாகச் சேர்ந்து பேச ஒத்துழைப்பதாயின் அது இந்நாட்டின் தொழிலாளர் சமூகத்துக்குப் பெரும் நன்மையாகும்.

ஆனால் நாட்டிலே பதிவாகியுள்ள தொழிலாளர் யூனியன்கள் மிக அதிகம். ஒருசில குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ளவர்கள் கையொப்பமிட்டு மனுச் செய்தால் போதும். அதை ஏற்று புதிய தொழிலாளர் யூனியனைப் பதிவு செய்ய வேண்டுமென்பது இப்போதுள்ள சட்டம். அதை மறுக்க அதிகாரமில்லை. இதனால் சில சுயநலமிகள் சேர்ந்து போட்டி யூனியன்களை ஆரம்பிக்கவும் இதனால் தொழிலாளர் சமூகம் பிளவுபடவும், தொழிற்சங்க இயக்கமே பலவீனமடையவும் ஏதுவாகின்றது. ஒரு தொழிலுக்கு ஒரு யூனியன்தான் இருக்க வேண்டுமென்று கண்டிப்பான சட்டம் செய்வதன், இன்றைய அவலநிலை கணக்கூடும். இது அரசாங்கத்துக்கும், நிர்வாகிகளுக்கும், தொழிலாளர் தலைவர்களுக்கும் நன்கு தெரியும். ஆனால் எக்காரணம்பற்றியோ இம்மூன்று பகுதியினரும் இவ்விஷயமாக இன்றுள்ள இம்முக்கிய குறையைத் தீர்க்க முற்படவில்லை. தொழிலாளரின் நன்மையிலே உண்மையில் அக்கறை கொண்டவர்கள் இது பற்றி அலட்சியமாக இருக்க முடியாது.

இது ஒருபுறமிருக்க கொழும்பில் கூடிய கூட்டு மகாநாட்டிலே என்ன முடிவுகள் செய்தனரென்பது இதை எழுதும் வரை தெரியவில்லை. பணமுடை காரணமாக, இனிச் சம்பள விகிதங்களை உயர்த்தாமல் இன்றுள்ள நிலையில் அப்படியே ஸ்திரப்படுத்திவிட அரசாங்கம் திட்டமிட்டிருப்பது உண்மையாயின், அது அரசாங்க சிப்பந்திகளிடையே மட்டுமன்றி, தனியார் துறையில் வேலை செய்யும் தொழிலாளர்களிடையிலும் மிக ஏமாற்றம் ஏற்படலாம். இதை ஒரு காரணமாகக் கொண்டு பெரிய பொது வேலை நிறுத்தத்தை ஆரம்பிப்பதாயின், பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் எவ்வளவு கஷ்டநஷ்டங்கள் ஏற்படுமென்பதை விளக்கத் தேவையில்லை. ஆகவே இதுபற்றி அரசாங்கம், தொழிலாளர் யூனியன்கள், நிர்வாகிகள் மூன்று அம்சத்தினரும் கூடி பரஸ்பரம் கலந்துபேசி, ஒரு சமரச முடிவுக்கு வருவதே பலவிதங்களிலும் சிறந்ததாகும்.

வேலைநிறுத்த காலத்தில் தொழிலாளர் விஷயமாக அரசாங்கம் கைக் கொள்ளும் கொள்கைபற்றியும் கொழும்புக்கூட்டம் ஆலோசனை செய்துள்ளதாம். இராணுவம், பொலிஸ் இவற்றைப் பாவிப்பது குறித்தும், கருங்காலிகளுக்கு உற்சாகமூட்டுவது, வேலைநிறுத்த காலத்தில் தொழிற்சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த மறுப்பது வேலைநிறுத்த தொழிலாளரையும், தொழிற்சங்க நிர்வாகிகளையும் வேலைநீக்கம்செய்வது, வேலைநிறுத்த காலத்தில் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பது முதலிய விஷயங்கள்பற்றி அக்கூட்டம் என்ன முடிவு செய்திருக்குமென்பதை ஊகிப்பது கஷ்டமல்ல. ஆனால் அரசாங்கக் கட்சியே தொழிலாளர் யூனியனை அமைத்துக் கொண்டிருப்பதாலும், அரசியல் நோக்கங்களுக்காகவும் வேலைநிறுத்தம் நடப்பதாலும் இம்முடிவுகளைப் பற்றி அரசாங்கம் அப்படியே ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகமே.

எப்படியும் கூடுமானவரை வேலைநிறுத்தமில்லாமலே யே, தொழிலாளரின் நலஉரிமைகளைப் பாதுகாக்கவும் தகராறுகளைப்பற்றி சமரசப் பேச்சுகளை நடத்தித் தீர்த்துக் கொள்ளவும் தக்க ஒழுங்குகளைச் செய்வதே நாட்டின் பொது நன்மைக்கு உகந்தது. அதற்கான முறையில் சம்பந்தப்பட்டவர்கள் கூடிப்பேசி ஓர் ஏற்பாடு செய்வது, இன்றைய அரசியல் சூழ்நிலையில் சுலபமல்லத்தான் என்றாலும் இதற்கான முறையில் செய்யப்படும்முயற்சிகளுக்கேபொது மக்களின் ஆதரவு இருக்க முடியும்.

—

இலங்கையின் விருப்பம்

கொழும்பு, வியாழன்

இலங்கைக்குத் தேவையான சீனியை அனுப்பும் எந்த நாட்டுடனும் தொடர்பு கொள்ள இலங்கை அரசாங்கம் விரும்புகிறதென்று வர்த்தக அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில், சில காலங்களுக்குப் போதுமான சீனி இப்பொழுது கைவசமிருக்கிறதென்றும் சீனித் தட்டுப்பாடு ஏற்பட்டதற்குக் காரணம், இலங்கைக்கு சீனி விநியோகிக்கும் நாடுகளான கிழக்கு ஜெர்மனியும், றுமேனியாவும் உரிய நேரத்தில் இங்கு அனுப்பத் தவறியதுதானென்றும் கூறினார்.

'மனிதகுணம் கடைத்தேற திருக்குறள் உருவானது'

வள்ளுவர் விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், வியாழன்

'மாணவர்கள் கல்வி கற்கும் போது ஒரு நோக்குடன் பயில வேண்டும். நோக்கமில்லாத வாழ்க்கை பூரணத்துவமடையாது. இந்த எண்ணத்துடன் தான் வள்ளுவர் மனித இனம் கடைத்தேற திருக்குறளை இயற்றினர்' என்று பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் மன்ற வள்ளுவர் விழாவில் பேசுகையில் கூறினர்.

செல்வி எம். இராஜினி தலைமையில் இவ்விழா நடைபெற்றது. பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எத்தர்மம் தன்னை ஆளாக்கியதோ அதே தர்மத்துக்காகவே உழைக்க வேண்டும். அன்பு காட்டி அன்பாக வாழ்வதே இல்லற வாழ்க்கை என்கின்றனர். அன்பு எங்கே அங்கே இறைவனைக் காணலாம். அன்பு இருக்கவேண்டுமாயின் எல்லாஉயிரிலும் நீ தருமியாக வாழவேண்டும். ஒன்றின் உயிரை உண்டு, உன் உடம்பின் சமாதியை எழுப்பவேண்டாம்என்றுவள்ளுவர்திறம்பட எடுத்துக்காட்டுகின்றனர். திருக்குறள் உலக நூலாக விளங்குவதற்கு அது காட்டிய வாழ்க்கை நெறியே காரணம்.

வைத்தீஸ்வரக் கல்லூரி ஆசிரியர் திரு. பொன். முத்துக்குமாரு பேசுகையில் கூறியதாவது:-

சிறந்த கலைஞன் எப்படிக் கலையை எடுத்துக் காட்டுகின்றனோ அதேபோல் கவிஞரும் தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கேற்ப தாம் கண்ட இன்பத்தை மக்களுக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றனர். மனிதன் மனிதனை வாழவேண்டும். அப்படியான வாழ்க்கைக்கு வழிகாட்டியாக நின்றவர் வள்ளுவரே சேக்கிழார், கம்பர் போன்ற பல கவிஞர் தமிழ் நாட்டில் தோன்றினர்கள். ஆனால் வள்ளுவர் பாலத் தெய்வப் புலவர் செந்நாப்புலவர் என்ற பெயர் பெறவில்லை.

திருக்குறளில் மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய அறம், பொருள் இன்பம் என்கின்றவை நன்கு எடுத்துக் கூறப்படுகின்றன. வள்ளுவரின் குறளிலே தமிழ் மணம் கமழ்கின்றது. நாலடியாரிலோ அல்லது சீவகசிந்தாமணியிலோ தமிழ் மணத்தைக் காணமுடியாது. சமண மணத்தையே காணக்கூடியதாக இருக்கின்றது. அதனால் திருக்குறள் அன்றும் இன்றும் என்றும் நிலைத்திருக்கின்றது.

பண்டிதர் வ. நடராசா பேசுகையில் கூறியதாவது: தனி மனித வாழ்க்கை நன்கு நலன் பெற மனக்கவலை நீங்கவேண்டும். மனிதன் எவனும் கவலை எப்போதாவது நிரம்பியவனாக இருப்பான். ஆகவே வள்ளுவர் மனக்கவலையை நீக்க வழிகளை வகுத்துக் காட்டுகின்றார். இடுக்கண்ணே கவலைக்குக் காரணம். ஆகவே இடுக்கண் வரும்போது நகுக என்கிறார். இடுக்கண் வராமைக்கு மனத்திலே மாசு இல்லாமல் இருக்கவேண்டும்.

கூட்டு வாழ்க்கையைப் பற்றி கூறும்போது வள்ளுவர் மறந்தும் பிறன்கேடு சூழற்க என்கிறார். மற்றவர்களுக்குத் துன்பஞ் செய்யாதே. சிறுபான்மையினரைப் பெரும்பான்மையோர் தாக்கக் கூடாது. இப்படி இல்லாமல் தாக்கினால் தர்மம் இல்லாமல் போய்விடும். அகம் புறம் ஆகிய இரண்டும் தூய்மையாக இருந்து மற்றவர்கட்குத் தர்மம் செய்து வாழும் வாழ்க்கையே நன்கு நடைபெறும்.

திரு. மு தேவராசா நன்றி கூறினர்.

அரசாங்க அதிபர்கள் மகாநாடு

அடுத்தவாரம் நடைபெறும்

கொழும்பு, வியாழன்)

விவசாயிகளிடமிருந்து பங்கீட்டரிசிப் புத்தகங்களை வாபஸ்பெறுவது சம்பந்தமாக ஆராயும்பொருட்டு, நாட்டிலுள்ள அரசாங்க அதிபர்கள் எல்லோரும் அடுத்த வாரம் உள்நாட்டமைச்சில் கூடுவார்கள். இதுசம்பந்தமாக ஆராய்ந்து அவர்கள் தங்களது கருத்தை அரசாங்கத்திற்குத் தெரிவிப்பார்கள்.

உள்நாட்டமைச்சில் அடுத்த செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை கூடவிருக்கும், அரசாங்க அதிபர்கள், கூப்பன் புத்தகங்களை வாபஸ்பெறுவதினால் விவசாயிகளுக்கு நேரும் பலாபலன்களையும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறுவார்கள் எனத்தெரிகிறது. விவசாயிகளிடமிருந்து கூப்பன் புத்தகங்களை வாபஸ்பெறும் திட்டத்தை அரசாங்கம் கடந்த வாரம் நிறுத்திவைத்தது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அரசாங்க அதிபர்கள் மகாநாட்டிற்கு, கைத்தொழில் கலாச்சாரமத்திரி திரு. மைத்திரிபாலசேனநாயக்க தலைமை வகிப்பார். மகாநாட்டில், சிரமதான இயக்கம், சமூகசேவைகள் சம்பந்தமாகவும் ஆராயப்படும்.

நின்றவாறேகல்வி கற்கின்றனர்

சொர்ணதோட்ட, வியாழன்

பத்மதில்லை, ஸ்ரீ பராக்கிரம மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள், நின்றவாறே கல்வி கற்கவேண்டியிருக்கிறது! பாடசாலையில் கதிரைகள், மேசைகள் பற்றாக்குறைதான் இதற்குக் காரணமாகும்.

பாடசாலையில் கரும்பலகைகள், வெண்கட்டிகள் இல்லாத காரணத்தினால் ஆசிரியர்கள் மணலில் எழுதி மாணவர்களுக்குப் போதிக்கின்றனர்.

—

மரத்துக்குக் கீழ் படிப்பு

நாத்தாண்டியா, வியாழன்

மாறவில என்ற இடத்திலுள்ள சிங்களப்பாடசாலையொன்றின் கட்டிடம் இடிந்து விழுந்த காரணத்தினால் அப்பாடசாலையைச் சேர்ந்த ஏராளமான குழந்தைகள் மரங்களுக்குக் கீழ் படித்து வருகின்றனர்.

ஐயாறன் எழுதுவது

இங்கு பல பொருள்களின் விலைகளும் நாளுக்குநாள் வஷம் ஏறுவதுபோல் ஏறுவதாகவும், அரசாங்கம்கூட தீவில் மற்ற இடங்களை விட யாழ்ப்பாணத்தவருக்கு அரிசியை மிக அதிக விலைக்கு விற்பதாகவும் ஓர் அன்பர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகிறார்.

வியாபாரம் என்பது ஒரு மேலான சமூகசேவை. பொது மக்களுக்குக் கூடுமானவரை நல்லபொருள்களைக் குறைந்த விலைக்கு விற்பதே வியாபார நெறி. ஆனால் இந்த நெறியின்படி இக்காலத்தில் எத்தனை பேர் நடக்கிறார்கள்?

ஒரு வர்த்தக நண்பரைக் கேட்டேன். அரசாங்கம் வர்த்தகத்தில் குறுக்கிடாமல் இருப்பின், மக்களுக்கு பல நல்ல சரக்குகளையும் மிக மலிவான விலைக்குக் கொடுக்கலாமென்றார். திடீர் திடீரென்று அரசாங்கம் புதுப்புது கட்டுப்பாடுகளையும், தடைகளையும், வரிகளையும் போடுவதால், வியாபார உலகமே திகைத்து நெறிபிசகிப்போய்விட்டதென்றும், இங்கிலையில் விலைகள் தாறுமாறுகிப்போவதில் வியப்பில்லை என்றும் சொல்லுகிறார்.

அரசாங்கத்துக்கோ அதிக பணம் தேவை. அதனால் புதுப்புது வரிகளையும், தீர்வைகளையும் போடுகின்றது. செலாவணியை மிச்சப்படுத்துவதாகச் சொல்லி, இறக்குமதிகளுக்குப் பலபல தடைகளை விதிக்கின்றது. கையிருப்பில் சரக்குகளை வைத்திருப்பவர்களுக்கு நல்ல வேட்டை. அவர்கள் வைத்ததுதான் விலை. வேறு வழியில்லை என்று பொதுமக்கள் வாங்கவேண்டியுள்ளது.

உள்நாட்டிலே பீதாதிய சரக்குகள் உற்பத்தியானால், அப்போது இறக்குமதித்தடைகளை விதிக்கலாம். ஆனால் தீர்வைகள், வரிகள், கட்டுப்பாடுகள் எல்லாம் ஏதோ மனம்போனபடி போடுகின்றார்கள். ஏனென்று கேட்டால் நாட்டின் மேலான நன்மைக்காக எல்லாரும் தியாகம்செய்யவேண்டுமென்று கூறுகின்றனர்.

ஆனால் கட்டுப்பாடுகள் ஏற்பட, சிலருக்கு நல்லவேட்டை! கலபமாகப் பணக்காரர்களாகி விடுவது பகிரங்க ரகசியம். நாம் எவ்வளவுதான் கரடியாகக் கத்தினாலும், ருசிகண்டவர்கள் அதைக் காதில் வாங்குவார்களா? அரசாங்கத்துக்கு வருமானத்தில்குறி. வர்த்தகர்களுக்கு லாபத்திலே. இந்நிலையில் பொதுமக்களாகிய நம் நன்மையை யார் பாதுகாக்கப் போகிறார்கள்? விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துகொண்டே போவதை நாம் எப்படித் தடுக்கமுடியும்?

* * *

ஆனால் இங்கு உற்பத்தியாகும் சில பொருள்களின் விலைகள் மிகவும் இறங்கிவிட்டனவாம். உதாரணமாக தக்காளிக்காய் ராத்தல் 15 சதம். தக்காளிப்பழம் ராத்தல் 20 சதம். முட்டை 17 சதம். எலுமிச்சம்பழம் 1 அல்லது 2 சதம். தோடம்பழம் 10 முதல் 25 சதம்வரை என்று அதே நண்பர் தெரிவிக்கிறார்.

இவற்றை விலைக்கு வாங்கும் பொதுமக்களுக்கு நல்லதுதான். ஆனால் பாடுபட்டு இவற்றை உற்பத்திசெய்பவர்கள் இப்படி விலை இறங்கிவிட்டதைப்பற்றி எவ்வளவு கவலையும் கஷ்டமும் படுகிறார்களோ? விலை குறைந்துகொண்டு போனால், அவர்கள் உற்சாகமிழந்து, உற்பத்தி செய்வதை நிறுத்திவிடவும்கூடும். இதுபற்றி அரசாங்கம் கவனித்து, அவர்களுக்கு உத்தரவாத உதவிகள் திட்டங்களை அளிக்க முன்வரவேண்டும். ஆனால் யாழ்ப்பாண உற்பத்தியாளர் விஷயமென்றால் அதை இக்காலத்தில்யார் கவனிக்கப்போகிறார்கள்?

* * *

முத்தவனுய் உலனுக்கு
மூத்தனனே
(ரும் பக்கம் பார்க்க)

"சிங்களத்தை எல்லோரும் பயிலவேண்டும்"

நீர்கொழும்பு, வியாழன்

"சிங்கள மொழி அரசகரும மொழியாக விருப்பதால், அம் மொழியை எல்லோரும் கற்க வேண்டும். எதிர்காலத்தை நன்குணர்ந்த, இங்குள்ள தமிழாசிரியர்கள் எல்லோரும் தங்களது குழந்தைகளுக்கு சிங்களத்தைக் கற்பிக்கிறார்கள்" என்று நீர்கொழும்பில் நடைபெற்ற பெற்றோர் சங்கக் கூட்டமொன்றில்தலைமையாசிரியர்கே. எஸ். வெற்றினி பெரேரா தமிழில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழ்ப் பேசும் ஆசிரியர்கள் பலர் இப்பகுதியில் இருக்கிறார்கள் என்றும், ஆனால் இந்த ஆசிரியர்கள் தங்களது குழந்தைகளுக்கு சிங்களத்தைப் போதிக்கிறார்கள் என்றும் ஆனால், சிலர் நல்ல வசதிகள் கிடைக்காது தங்களது குழந்தைகளுக்கு சிங்களத்தைப் போதிக்க கஷ்டப்படுகிறார்கள் என்றும் கூறினர்.

செனட்டர் ஏ. டி. ஜயசேகரா பேசுகையில், நீர்கொழும்பிலுள்ள ஏராளமான சிங்கள பெற்றோர், தங்களது குழந்தைகளுக்கு சிங்களத்தைப் போதிக்கத் தவறியதையிட்டு மனம் வருந்துகிறார்களென்றும் ஆனால் இப்பொழுது நிலைமையை நன்குணர்ந்து கொண்டார்களென்றும் கூறினர்.

நீர்கொழும்பிலுள்ள சில சிங்கள சமூகத்தினர், தமிழ்மொழியைத் தங்களது மொழிபொன்று கருதி அம்மொழியை நன்கு கற்றுக் கொண்டார்கள் என்றும் அவர்கள் சிங்களம் படிக்க விரும்புகிறார்கள் என்றும் அவர் கூறினர்.

நீர்கொழும்பு எம். பி. திரு. டி. குயின்டன் பெர்ணாண்டோ தமிழிலும் சிங்களத்திலும் பேசுகையில், தமிழ் பேசும் சிங்கள பெற்றோர் இருவகையாகப் பிரிந்து விட்டனரென்றும் இதனால் அவர்களது குழந்தைகளுக்கு எதிர்காலம் மிகுந்த கஷ்டமானதாகவிருக்கும் என்பதை அந்தப் பெற்றோர் நன்குணரவேண்டும் என்றும் கூறினர்.

தமிழ்ப்பாடசாலையொன்றின் தலைமையாசிரியர் திரு. லியோனிஸ் பெர்ணாண்டோ பேசுகையில், இப்பகுதியில் உள்ள சில பாடசாலைகளில் சிங்களத்தை படிக்க விரும்பும் மாணவர்களுக்கு சிங்களம் போதிக்கப்படுகிறதில்லை என்றும் இது கவனத்துக்கு கொண்டு வரவேண்டிய விஷயம் என்றும் கூறினர்.

காவல்கைதிகள் போட்டிக்கு நின்றால் விடுதலை?

இடைத்தேர்தல் பற்றி சட்டமந்திரி விளக்கம்

புதுடில்லி, மார்ச் 14

இந்தியாவில் நடைபெறும் இடைத் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் எவரும் காவல் கைதியாக இருந்தால் அவரை விடுதலைசெய்வதற்கு வசதிசெய்யப்படுமென்று இந்திய சட்ட மந்திரி ஏ. கே. சென் இன்று ராஜ்யசபையில் கூறினர்.

நெருக்கடி காலம் அமுலிலிருப்பதால் இடைத் தேர்தல் சுயேட்சையாக நடைபெற முடியாதென்றும் கம்யூனிஸ்ட் கட்சியினர் பலர் காவல் கைதிகளாக இருப்பதால் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி கலந்து கொள்வது சிரமமென்றும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. குபேஷ்குப்தா கூறினர்.

இதற்கு சட்ட மந்திரி திரு. சென் பதிலளிக்கையில் நியாயமகவும் நேர்மையாகவும் தேர்தல்கள் நடைபெறுமெனவும் இடைத்தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் காவல் கைதிகளாக இருந்தால் அவர்களை விடுதலை செய்ய வசதிசெய்யப்படுமென்றும் கூறினர்.

தேர்தல் பிரசாரங்களுக்குத் தடையிருக்கமாட்டாதென்று கூறிய மந்திரி நாட்டிற்குத் தீங்கு செய்யக்கூடியதும் பகைவருக்கு உதவிசெய்யக் கூடியதுமான பிரசாரத்துக்கு அனுமதிக்க முடியாதென்று கூறினர்.

கம்யூனிஸ்ட் கட்சி, தொழிற் சங்க இயக்கங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை நீக்கவேண்டுமென்று மேற்கு வங்க கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் கமிஷனருக்கு எழுதியிருப்பதாகவும் மந்திரி சென் கூறினர்.

பரிதாப மரணம்

வெலிகாகம், வியாழன்

திஹாகொடை என்ற இடத்தைச் சேர்ந்த 65 வயதுள்ள டபிள்யு. கரோ என்பவரின் மீது தென்னை மரமொன்று வீழ்ந்ததினால் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார்.

இளைஞன் தற்கொலை

மாவிட்டபுரம், வியாழன்

தந்தைக்குப் பயந்து தனயன் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் உடுவிலிலுள்ள சங்குவேலியில் நடைபெற்றுள்ளது.

உடுவில் மான்ஸ் பாடசாலையில் கல்வி பயிலும்16 வயதுடைய வேலுப்பிள்ளை ஆனந்த வடிவேலுவின் மரணம்குறித்து மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. வெல்லி டி. தமோதரம் மரண விசாரணை நடத்தினர். சுன்னாகம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. சின்னத்தம்பி சாட்சிகளை ஆஜர் செய்தார்.

காலஞ்சென்றவரின் தாய் விசாலாட்சி சகோதரி சற்தேவி ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மாஜிஸ்டிரேட் விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

இளம்பிள்ளைவாதம்

மாத்தறையில் தடுப்பு இயக்கம்

மாத்தளை, வியாழன்

மாத்தளை மாவட்டத்தில் இளம்பிள்ளைவாத தடுப்பு இயக்கத்தை பெருமளவில் நடத்துவதென்று திட்டப்பட்டுள்ளது. இங்குள்ள சுகாதார அதிகாரிகள் இதுபற்றி ஆராய்வதற்காகக் கூடினர் ஒரு குறிப்பிட்ட வாரத்தில் இந்த இயக்கத்தை நடத்துவதென்றும், மூன்று மாதக் குழந்தைகள் தொடக்கம் எட்டு வயது குழந்தைகள் வரையும் தடுப்பு ஊசி ஏற்றுவதென்றும், இவர்களில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கணக்கெடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் கொலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சி: சங்கக்கடைகள் பூட்டியிருந்தது.

நீதியரசர்: தேநீர் கடையைப்பற்றி சொல்லுகிறேன்.

சாட்சி: இரண்டு கடை திறந்திருந்தது.

நீதியரசர்: கடைகளுக்கு ஓடிப்போய் இச்சம்பவத்தை ஏன் சொல்லவில்லை.

சாட்சி: பயத்தால் போகவில்லை.

நீதியரசர்: கொடிகாமம் விதானையார் வீடு எங்கே இருக்கிறது? ஏன் போகவில்லை?

சாட்சி: கச்சாய் ரோட்டில் இருக்கிறது. வீடு தெரியாது. பயத்தால் போகவில்லை.

வழ: சம்பவம் நடந்த இடத்திற்கு பக்கத்தில் 3 கடைகளுண்டு?

சாட்சி: இல்லை. இரண்டு கடை. தாவுதுகாக்கா கடையும் மல்லாகம் கந்தையாகடையும்!

வழ: ஏன் தாவுது கடைக்கு போய் சொல்லவில்லை.

சாட்சி: பயந்துபோகவில்லை.

வழ: தாவுது கடைக்கு பின்னால் வந்து கூப்பிட்டிருக்கலாம்?

சாட்சி: போக ஏலாது.

நீதியரசர்: றெயில் தண்டவாளத்தால் கச்சாய் ரோட்டுக்கு போயிருக்கலாமே!

சாட்சி: போக ஏலாது மதில் இருக்கிறது.

நீதியரசர்: றெயில் தண்டவாளத்திற்கு குறுக்கேயும் மதில் இருக்கிறதா?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: சடையன் குளற கதிரன் வந்திருந்தாரென்றால் நீரும் சத்தம் போட்டிருந்தால் கேட்டிருக்கும்.

சாட்சி: ஆம்.

நீதியரசர்: தாவுது காக்காவுக்கும் கேட்டிருக்கும்.

சாட்சி: ஆம்.

நீதியரசர்: தாவுது கடைக்கு கம்மாலை எந்தப் பக்கம்?

சாட்சி: பலாப்பக்கம்.

நீதியர:- தாவுது கடைக்கு சமீபத்தில் சம்பவம் நடந்தது?

சாட்சி:- ஆம்.

வழ:- கொடிகாமம் சந்தியில் பெரிய விளக்கு இருக்கிறதா?

சாட்சி:- இல்லை.

வழ:- அம்மனை வரவேற்க சந்தியில் கூட்டமிருந்தது?

சாட்சி:- நான் காணவில்லை.

நீதியர:-கதிரனைச் சந்தித்த பின், சடையனின் மருமகனின் கள்ளுக்கொட்டிலுக்கு போயிருக்கலாம்?

சாட்சி;- அந்த நேரம் நிற்பார்களோ? இல்லையோ? என்று நினைத்தேன்.

நீதியர:- ஏன் தென்டிக்கவில்லை?

சாட்சி:- பயத்தால் போகவில்லை.

வழ: சடையனைக் கனகாலமாய் தெரியும்?

சாடசி: ஆம்.

வழ: ஊரில் சடையன்கரைச்சல் பேர்வழி?

சாட்சி: எனக்குத் தெரியாது. சொல்லக்கேள்வி.

வழ: கோர்ட்டில் சடையனுக்கு எதிராக வழக்குகள் இருந்தது தெரியுமா?

சாட்சி: எனக்குத் தெரியாது.

வழ: பொலிசில் சடையனைப் பற்றி முறைப்பாடுகள் உண்டு?

சாட்சி; தெரியாது.

நீதியரசர்: பொலிசுக்குப் போவதாயிருந்தால் ஏன் ஆஸ்பத்திரிக்குப் போனீர்?

சாட்சி: பொலிசார் ஆஸ்பத்திரியில் இரு பார்கள் என்று.

நீதியரசர்: கதிரன் உம்மைப் பொலிசுக்கு போகச் சொல்லியிருக்காவிட்டால் நீர் போயிருக்கமாட்டீர்?

சாட்சி: எனக்கு சம்பவம் தெரியாது. சடையன் இறந்தது தெரியாது?

நீதியரசர்: பனையால் விழுந்தவனை மாடு ஏறிமிதித்த கதை தெரியுமா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: சடையன் குத்தப்பட்டு கல்லால் அடிக்கப்பட்டதாகக் கூறினீர். அதன்பின்யும் இறந்தது தெரியாதா?

சாட்சி: இறந்தாரா என்று பார்க்கப் போனேன்.

வழ: சடையன் குற்றப்பட்டு மறியலுக்குச் சென்றது தெரியுமா?

சாட்சி: தெரியாது.

வழ: சடையன் ஒரு ஐ ஆர். கி. என்பது தெரியுமா?

நீதியரசர்: அப்படிச் சொன்னால் விளங்காது. 'எவிச்சோல் என்பது தெரியுமா?

சாட்சி: தெரியாது.

நீதியரசர்: எக்சைஸ் ஆட்களுடன் சடையன் போகிறவரா?

சாட்சி: தெரியாது. நானும் என்பாடும்.

நீதியரசர்: உம்முடைய தொழிலை நீர் பார்த்துக் கொண்டிருந்தால் நன்றாயிருக்கும்.

எக்சைஸ்காட்டியுடன் கத்திகொண்டு போகிறவரா?

சாட்சி: தெரியாது.

வழ: வழக்கில் சாட்சியம் சொன்னீரா?

சாட்சி: ஞாபகமில்லை. அந்தக்காலத்தில் சொல்லியிருப்பேன்.

நீதியரசர்: இந்த வழக்கின் முன் எத்தனை தடவை சாட்சி சொன்னீர். எங்கே?

சாட்சி: ஒருதரம் சுப்பிரீம் கோர்ட்டில்.

நீதியரசர்: அப்படியென்றால் கீழ் கோர்ட்டிலும் சொல்லியிருப்பீரே?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: நீர் சாட்சி சொன்ன வழக்கின் முடிவென்ன?

சாட்சி: தெரியாது.

நீதியரசர்: இப்படிப் பொய் சொல்லும் உம்மை மற்றவர்கள் நம்ப வேண்டுமென எதிர் பார்க்கிறீரா?

சந்தியில் ரேடியோ பாடியதா?

சாட்சி: தாவுது காக்கா கடையில் பாடியது.

நீதியரசர்: கடைகளில் றேடியோ பலமாகப் பாடுவது வழக்கம்?

சாட்சி: சாதாரணமாகப் பாடியது.

நீதியரசர்: சடையன் குளறிய சத்தம் றேடியோ சத்தத்தின் மேலாகக் கேட்டிருக்கும் என்கிறீரா?

சாட்சி:-ஆம்.

வழ:- மல்லாகம் கந்தையா அடித்த சத்தம் கேட்டது.?

சாட்சி:- ஆம் கேட்டது.

வழ:- சடையன் முகத்தில் டோர்ச் லைட்டால் அடித்தார்கள்?

சாட்சி:- ஆம்.

வழ:- டாக்டர் அப்படி முகத்தில் காயமில்லையென்று சொல்லியிருக்கிறார்?

சாட்சி:- அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

அடுத்ததாக கதிரன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

சம்பவம் நடந்த அன்று வீட்டிலிருந்தேன். 'ஐயோ ஐயோ' என்று குளறிக கேட்டதும் வீட்டிலிருந்து வெளி ஒழுங்கைக்கு வந்தேன். ரேடியோ பாட்டு ஒன்றும் கேட்கவில்லை. மற்ற நாட்களில் ரேடியோ பாட்டு கேட்பதுண்டு. பொன்னன் ஓடிவந்து வீட்டிற்கு வரும்படி சொன்னர். குஞ்சத்தம்பியும் ராசுவும் சடையனை குத்திவிட்டதாகச் சொன்னர். வேறு ஒன்றும் சொல்லவில்லை.பொன்னன் வீட்டிற்குப் போனர். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தபோது சடையன் இல்லை அங்கே வந்த காரில் ஆஸ்பத்திரிக்குப் போனேன். சடையன் இறந்ததாக அறிந்தேன். அதே காரில் திரும்பினேன்.

நீதியரச:- ஏன் பொலிசுக்கு போகவில்லை?

சாட்சி:- அந்தக் காரைவிட்டால் வீட்டுக்குப் போக வசதியில்லை.

நீதிய :-அதே காரில் பொலிசுக்கு போயிருக்கலாமே?

சாட்சி:- நான் போகவில்லை.

நீதியர:- காரில் இருந்தவர்களிடம் உமக்குத் தெரிந்ததை ஏன் சொல்லவில்லை?

சாட்சி:- சொல்லவில்லை.

எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

இந்த நிலையில் விசாரணையைத் தொடர்ந்து நடத்தத் தாங்கள் விரும்பவில்லையென ஜூரிமார் தெரிவித்தனர்.

சதிவழக்கு

சுபரீம கோர்ட்டில் ஒலிபெருக்கிகள்

கொழும்பு, வியாழன்

தோல்வியுற்ற புரட்சி சதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் சுபரீம் கோர்ட்டில், ஒலிபெருக்கிகள் பொருத்தப்படும். இதற்கான வேலைகள் இப்பொழுது நடைபெற்றுவருவதாகத்தெரிகிறது.

சதிவழக்கு விசாரணைகள், எதிரிகளுக்குக் கேட்கக்கூடிய முறையில், சில ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென்று சதிவழக்கு,கடைசியாக விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பொழுது, நீதியரசர்களோ எதிரிகள் சார்பில் ஆஜரான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியுளி கேட்டிருந்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சதிவழக்கு நீதிபரர்கள், இதுசம்பந்தமாக தகுந்த ஒழுங்குகள் மேற்கொள்ளும்படி றெஜிஸ்தாரை கேட்டுக்கொண்டார்கள்.

இதைத் தொடர்ந்துதான் இப்பொழுது சதிவழக்கு விசாரணை செய்யப்படும் சுபரீம் கோர்ட்டில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்படும் வேலைகள் நடைபெற்றுவருகிறது.

இந்தியாவிடமிருந்து தொலைபேசிகள்

கொழும்பு, வியாழன்

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசி உதிரிப்பாகங்களை இந்தியாவிடமிருந்து வாங்குவதற்காக அடுத்த கிழமை இலங்கையிலிருந்து மூன்று போர் கொண்ட தோஷ்டியொன்று இந்தியா செல்லவிருக்கின்றது. பங்களூரிலுள்ள மத்திய தொலை பேசி உற்பத்தி தொழிற்சாலையிலிருந்து தொலை பேசி உதிரிப்பாகங்களை வாங்குவதற்கு தபால் தந்தி சேவையைச் சேர்ந்த மூன்று இன்ஜினியர்கள் இந்தியா செல்லவிருக்கிறார்கள். மாகாணங்களில் உள்ள தொலைபேசி சேவையை சீர்படுத்துவதற்காக உதிரிப்பாகங்கள் வாங்கப்பட விருக்கின்றன. ஏஜண்டுகள் மூலம் வாங்குவதனால் வெளிநாட்டு செலாவணி அதிகரிக்கும் என்பதற்காக இலங்காவே நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்தவிருக்கின்றது.

ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முறைமையால் எல்லாம்
படைக்கின்றானே
ஏத்தவனைய் ஏழுலகும்
ஆயினானே
இன்பனைத் துன்பம்
கடிகின்றானே
காத்தவானைய் எல்லாந்தான்
காண்கின்றானே
கடுவினையேன் தீவினையைக்
கண்டுபோகத் தீர்த்தவனே
திருச்சோற்றுத்துறையுளானே
திகழொளியே சிவனேயுனை
னயம் நானே

—திருநாவுக்கரசர்.

சோவியத் அங்கீகாரம்

மாஸ்கோ, மார்ச் 14

குவைத்தைச் சோவியத் யூனியன் அங்கீகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குவைத்துடன் ராஜீய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளவும் சோவியத் யூனியன் முடிவு செய்திருக்கிறது.

4 வட்டாரங்களில் போட்டியில்லை; 21 வட்டாரங்களில் 70 பேர் போட்டி

கட்டைவேலி கி. ச. அபேட்சை நியமனம்

யாழ்ப்பாணம், வியாழன்

கட்டைவேலி கிராமசபைப் பொதுத் தேர்தலுக்கான அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அபேட்சை மனுக்களை யாழ்ப்பாணம் உதவித்தேர்தல் அதிகாரி திரு. கே. கணபதி ஏற்றுக்கொண்டார். 25 வட்டாரங்களில் 4 வட்டாரங்களுக்குப் போட்டியில்லை. 21 வட்டாரங்களில் 70 பேர் போட்டியிடுகின்றனர்.

போட்டியிடுபவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

1-ம் வட்டாரம்: திரு. சிதம்பரப்பிள்ளை வெற்றிவேலு (போட்டியில்லை).

2-ம் வட்டாரம்: திரு. சிற்றம்பலம் முருகேசு மார்க்கண்டு, திரு. ஆழ்வான் சிவகுரு, திரு. பி. பொன்னையா.

3-ம் வட்டாரம்: திரு. கந்தர்வல்லிபுரம், திரு. கம்பர் பொன்னுச்சாமி கார்த்திகேசு, திரு வி. ஆறுமுகம், திரு. கே. செலத்துரை.

4-ம் வட்டாரம்: திரு. சின்னத்தம்பி மயில்வாகனம், திரு. செல்லையா தங்கராஜா, திரு. க. வெற்றிவேலு.

5-ம் வட்டாரம்: திரு. எம். கதிர்காமு, திரு பொன்னையா செல்லத்துரை, திரு. ஆறுமுகம் இராமலிங்கம் சுப்பிரமணியம்.

6-ம் வட்டாரம்: திரு. ஏ. சின்னத்தம்பி, திரு. இளைய தம்பி சிவசிதம்பரம்.

7-ம் வட்டாரம்: திரு. வி. பொன்னையா, திரு. கதிர்காமர் தம்பையா, திரு. இளைய தம்பி மார்க்கண்டு, திரு. சண்முகம் உருத்திரசபாபதி.

8-ம் வட்டாரம்: திரு. ஆழ்வான் கந்தன், திரு. கே. சிதம்பரப்பிள்ளை, திரு. எஸ். மகேசு

9-ம் வட்டாரம்: திரு. பெரிய தம்பி நல்லதம்பி, திரு. தம்பாபிள்ளை ஆறுமுகம், திரு. சின்னத்தம்பி தங்கராசா.

10-ம் வட்டாரம்: திரு. சுவாமிநாதர் கந்தையா (போட்டியில்லை).

11-ம் வட்டாரம்: திரு. புண்ணியம் சிவயோகம், திரு. கதிர்காமர் கார்த்திகேசு, திரு. நாராயணபிள்ளை செல்லையா, திரு. வேலன் நடேசு.

12-ம் வட்டாரம்: திரு. வி. எஸ். வடிவேல், திரு. தம்பையா திசவீரசிங்கம், திரு. பகபதி சிவவிநாயகம், திரு. மயிலு கணபதிப்பிள்ளை.

13-ம் வட்டாரம்: திரு. சுப்பிரமணியம் தங்கவடிவேல், திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு.

14-ம் வட்டாரம்: திரு. மயில்வாகனம் சிவவினயகம், திரு. கனபதிப்பிள்ளை தியாகராசா, திரு. வேலுப்பிள்ளை வேல்முருகு, திரு. வி. கே. வல்லிபுரம்.

15-ம் வட்டாரம்: திரு. சிலம்பு மாசிலாமணி, திரு. கந்தையா ஐயாத்துரை.

16-ம் வட்டாரம்: திரு. சின்னையா தம்பையா (போட்டியில்லை).

17-ம் வட்டாரம்: திரு. முருகேசு கந்தவனம், திரு. சிதம்பரப்பிள்ளை கந்தசாமி.

18-ம் வட்டாரம்: திரு. என். பொன்னுத்துரை, திரு. தாமோதரம்பிள்ளை சுப்பிரமணியம், திரு. கார்த்திகேசு மார்க்கண்டு, திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி.

19-ம் வட்டாரம்: திரு. பி பொன்னையா, திரு. முருகேசு வல்லிபுரம், திரு. கதிர்காமர் மாணிக்கம், திரு. கார்த்திகேசு குமாரசாமி, திரு சபாபதி தம்பிஜயா.

20-ம் வடடாரம்: திரு. குமாரசாமி நடராசா, திரு. சின்னத்துரை பரஞ்சோதி, திரு. சபாபதிப்பிள்ளை தியாகராசா, திரு. எம். ராஜேந்திரா, திரு. தம்பு பாலசிங்கம், திரு. கார்த்திகேசு மயில்வாகனம்.

21-ம் வட்டாரம்: திரு. கந்தவனம் சந்திரசேகரம், (போட்டி இல்லை).

22-ம் வட்டாரம்: திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கம், திரு. சபாபதிப்பிள்ளை மகேந்திர ராஜா.

23-ம் வட்டாரம்: திரு. பொன்னர் சிவபாக்கியம், திரு. சரவணை ரத்தினம், திரு. பி. பொன்னையா, திரு. நடராஜா நற்குணம்.

24-ம் வட்டாரம்: திரு. தியாகராஜா விவேகானந்தன் திரு. என். தர்மலிங்கம்

25-ம் வட்டாரம்: திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி, திரு. வேலுப்பிள்ளை பாலசண்முகம், திரு. செல்லையா கனகரத்தினம், திரு சுப்பு கந்தவனம், திரு. நாகன் சீனியன்.

மாரியம்மன்கோவில் கும்பாபிஷேகம்

றக்குவாணை, புதன்

இறக்குவாணை மாரியம்மன் கோவிலில் புதிதாக, யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அம்பாளின் எழுந்தருளி விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்யும் முகமாகக் கடந்த தை மாதம் 28-ம் திகதி தொடங்கி தொடர்ந்து 45 நாட்களுக்கு அபிஷேக ஆராதனைகளும் அடியார்களின் கூட்டுப் பிரார்த்தனைகளும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இந்நாளந்த பூஜைகளை இங்கு வாழ் தமிழ் மக்கள் கூட்டாகவும், தனியாகவும் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். கடந்த பல வருடங்களாகச் சிறப்புடன் திருவிழாக்களும், பூஜைகளும் நடைபெற்றுவந்த போதிலும் எழுந்தருளி விக்கிரகம் ஒன்றில்லாதது இங்குள்ள சைவப் பெருமக்களுக்குப் பெருங்குறையாயிருந்தது. இக் குறையை இறக்குவாணைச் சைவபரிபாலன சபையினர், சபைத் தலைவர் திரு. க சபாரத்தினம் தலைமையில் எடுத்துக் கொண்ட பெரு முயற்சியால் நீங்கிவிட்டது. தொடர்ந்து தினமும் நடந்துவரும் பூஜைகளில் ஏராளமான சைவ, பௌத்த மக்கள் கலந்து கொள்கின்றனர். கூட்டுப் பிரார்த்தனை சைவபரிபாலன சபைத் தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுத் தினமும் திரு. இ. சின்னத்துரை யாசிரியரால் நடாத்தப்பட்டு வருகிறது.

இன்று நடைபெற்ற கும்பாபிஷேகத்துடன் விழா முடிவடைந்தது. அன்னதானம் நடைபெற்றது.

எழுத்தாளர் பங்குபற்றி மந்திரி

சென்னை, மார்ச் 14

சென்னையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் தகவல், ஒலிபரப்பு மந்திரி டாக்டர் கோபால் ரெட்டி பேசுகையில் எழுத்தாளர்கள் ஆக்க முறை இலக்கியத்தைப் படைக்க வேண்டுமென்றும், அவர்கள் படைக்கும் இலக்கியம், உடனடியாக மறைந்துபோகாத; காலத்தால் சாகாத, என்றும் நிலைத்து நிற்கக் கூடியதாகவிருக்கவேண்டுமென்று கூறினர்:

பத்திரிகைகளுக்கும், வானொலிக்கும் எழுதும் எழுத்தாளர்கள், காலத்தின் உள்ளத்தைப் பிரதிபலித்துக்காட்டும் இலக்கியத்தை உருவாக்கவேண்டுமென்றும், தேசிய நெருக்கடியில் எழுத்தாளர்களின் பங்கு முக்கியமானதென்றும் டாக்டர் கோபால் ரெட்டி கூறினர்.

வானொலி

சென்னை, மார்ச் 14

தமிழ் நாட்டில் எல்லா பஞ்சாயத்திலும் வானொலிகள் இணைக்கப்பட்டுவிட்டன.

திருமலைச் செய்திகள்

காரியாதிகாரி கந்தோர்

கிண்ணியாவுக்கு என்று தனியாக ஒரு காரியாதிகாரி காரியாலயம் இல்லாத குறை ஏற்படமாட்டா தென்றும் இக் காரியாலயம் அமைப்பதற்கு கிண்ணியாவின் பழைய பிரசவ விடுதிக் கட்டிடத்தை திருத்தி அமைப்பதற்காக நடவடிக்கையில் திருமலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஏ. ள்பெல்வின்ட் ஈடுபட்டுள்ளாரென்றும் மூதூர் இரண்டாவது பாராளுமன்றப் பிரதிநிதி ஜனப் ஏ. எல். ஏ. மஜீத் கூறினர்.

விடுமுறை வழங்குக!

திருகோணநாயகரால்ய பெருஞ்சாந்திக் குடமுழுக்கு சித்திரை மாதம் 3-ம் நாள் நடைபெற இருக்கின்றது தெரிந்ததே. சைவசமய வரலாற்றிலே முக்கிய இடங்கொண்டுள்ள இத்தலத்தின் பெருஞ்சாந்திக் குடமுழுக்கு சித்திரை 3-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இதனையொட்டி. திருக்கோணமலையில் மாணவர்கள் பெரும்பாலாகப் படிக்கும் இந்துக் கல்லூரிகளுக்கும் ஸ்ரீ சண்முகவித்தியாலயத்திற்கும் ஏப்ரல் 1, 2, 3-ம் திகதிகளில் விசேட விடுமுறையாக வழங்கவேண்டுமென திரு. இராஜவரோதயம் (திருமலை எம். பி) கல்வி மந்திரியை கடிதமூலம் கோரியுள்ளார்.

மாடுகள் தொல்லை

முதூர் தெருக்களின் நடுவே இரவில் கட்டாக்காலி மாடுகள் நடமாட்டம் அதிகரித்து இருப்பதால் வாகனங்கள் போக்குவரத்துச் செய்வதற்கு மிகக்கஷ்டமாயிருக்கிறது. இது பற்றி மாடுகளின் சொந்தக்காரர்கள் ஒருவித நடவடிக்கையும் எடுக்காததையிட்டு பொதுமக்கள் கிராமச்சபையிடம் முறையீடு செய்துள்ளனர்.

அஞ்சல் செய்யப்படும்

திருமலை கோணநாயகராலய கும்பாபிஷேக வைபவம் ஏப்ரல் 3-ந் திகதி நடைபெற இருக்கிறது. அன்று தொடங்கி மூன்று தினங்கள்வரை இலங்கை வானொலி தமிழ்ப் பகுதி இவ்வைபவத்தை அஞ்சல் செய்ய தீர்மானித்துள்ளது.

மீண்டும் தெரிவு

தம்பலகமம் கிராமச்சபைக் கட்டிடத்தில் தலைவர் திரு. சு. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் திரு. எஸ். மயில்வாகனம் மீண்டும் உபதலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கோர்ட்டில் காதல் ஜோடி

மன்னர், புதன்

சமீபத்தில் தலைமன்னர் பொலிசில் சரணடைந்ததாகக் கூறப்படும், இளம் காதலர் ஜோடி ஒன்று மன்னர்க் கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டது. காதலனை 500 ரூபா பிணையில் செல்லும்படி நீதவான் உத்தரவிட்டு மேல்விசாரணையை அடுத்தமாதம் 19-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். பிரான்சிஸ்காமேரி, றெஜினா என்ற இப்பெண் இரட்சணிய சேனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மடுமாதா திருநாள்

மன்னர், புதன்

மடுமாதா பங்குனித் திருநாளுக்கானஏற்பாடுகள் நடைபெறுகின்றன. யாத்திரிகர்களின் ஆத்ம விஷயங்களைக் கவனிப்பதற்காக பல குருமார்கள் வந்துள்ளார்கள்.

கி. ச. தலைவர் இரு இடங்களில் போட்டியின்றித் தெரிவு

உடுப்பிட்டி கிராம சபை அபேட்சை நியமனம்

யாழ்ப்பாணம் வியாழன்

உடுப்பிட்டி கிராமசபை பொதுத்தேர்தலுக்கான அபேட்சை மனுக்கள் உதவித் தேர்தல் அதிகாரி திரு. கே. கணபதி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டன. 24 வட்டாரங்களில் 5 வட்டாரங்களுக்குப் போட்டியில்லை. தற்போதைய தலைவர் திரு. ஆர். ஆர். கர்மரதத்தினம் இரு வட்டாரங்களில் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏனைய 19 வட்டாரங்களிலும் 56 பேர் போட்டியிடுகின்றனர். தேர்தலில் போட்டியிடுகின்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்: திரு கணபதிப்பிள்ளை பொன்னுச்சாமி, திரு. இளையதம்பி கணபதிப்பிள்ளை, திரு. குஞ்சன் சத்தியன், திரு. வல்லி கிட்டினபிள்ளை.

2-ம் வட்டாரம்: திரு.கார்த்திகணபதிப்பிள்ளை சின்னையா, திரு. செல்லையா கந்தசாமி.

3-ம் வட்டாரம்: திரு. கிட்ணபிள்ளை கோபாலு, திரு. செம்பர் திருநாவுக்கரசு.

4-ம் வட்டாரம்: திரு இளைய தம்பி திருநாவுக்கரசு, திரு. சிதம்பரி வெற்றிவேலு.

5-ம் வட்டாரம் திரு. ஆர். ஆர்.தாமோதரம், திரு. ஆசைப்பிள்ளை ஆறுமுகம்.

6-ம் வட்டாரம்: திரு. வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை, திரு. வேலுப்பிள்ளை விஸ்வலிங்கம்.

7-ம் வட்டாரம்: திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் (போட்டியில்லை).

8-ம் வட்டாரம்: திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் (போட்டியில்லை).

9-ம் வட்டாரம்: திரு.துரைச்சாமி குகதாஸ், திரு.சின்னவன் கிட்னசாமி, திரு. வெள்ளைத் தம்பி ராசகோபாலு, திரு. சின்னையா சிவராசா.

10-ம் வட்டாரம்: திரு. செல்லத்துரை அரியரத்தினம், திரு. எஸ். ஈஸ்வரலிங்க பெருமாள், திரு. வேலுப்பிள்ளை தம்பு.

11-ம் வட்டாரம்: திரு. வடிவேலு ஐயர் சிவநாத ஐயர் (போட்டியில்லை).

12-ம் வட்டாரம்: திரு. மயில்வாகனம் துரைசாமி, திரு. சின்னத்தம்பி முத்துலிங்கம்.

13-ம் வட்டாரம்: திரு. தம்பையா விசுவலிங்கம், திரு. நல்லதம்பி சந்திரன், திரு. சுப்பையா தம்பு.

14-ம் வட்டாரம்: திரு. கிட்ணபிள்ளை சேனாதிராசா, திரு. முத்து நடராசா, திரு. கதிண்பிள்ளை குட்டித்தம்பி.

15-ம் வட்டாரம் திரு. ஆழ்வார் பொன்னையா, திரு.வல்லிபுரம் குமாரசாமி, திரு. சுப்பையா கனகலிங்கம்.

16-ம் வட்டாரம் திரு. கோபால் துரைசிங்கம், திரு. சதாலிங்கம் பத்மநாதன், திரு. இராமன் நடராசா.

17-ம் வட்டாரம்: திரு. சோமகந்தரம் சிவராஜா, திரு. எஸ். சரவண பெருமாள்.

18-ம் வட்டாரம்: திரு. சின்னத்தம்பி ஆறுமுகம் (போட்டியில்லை).

19-ம் வட்டாரம்: திரு. வல்லிபுரம் சோமசுந்தரம், திரு. கந்தர் ஆறுமுகம், திரு. கிட்னர் வல்லிபுரம், திரு. எஸ். சிவபாதசுந்தரம்.

20-ம் வட்டாரம்: திரு. வேலுப்பிள்ளை கனகசபை, திரு. கந்தசாமி சுப்பிரமணியம்.

21-ம் வட்டாரம்: திரு. கேசு யோகலிங்கம். (போட்டியில்லை).

22-ம் வட்டாரம்: திரு. கந்தன் ஆறுமுகம், திரு. வீரகத்தி மகாலிங்கம், திரு. சின்னத்தம்பி கனபதிப்பிள்ளை, திரு. சின்னத்தம்பி இராசையா திரு. தம்பன் ஆழ்வாப்பிள்ளை,

23-ம் வட்டாரம்: திரு. கந்தன் அப்புக்குட்டி, திரு. குஞ்சன் சத்தியன்.

24-ம் வட்டாரம்: திரு. சிவக்கொழுந்து நாகரத்தினம் (போட்டியில்லை.)

"மனித குலத்தைப் புனிதப் படுத்தும் திருக்குறள்"

திருவள்ளுவர் திருநாள் விழாவில் சாவகச்சேரி எம். பி.

சாவகச்சேரி, வியாழன்

"இந்து மதம் இந்து மகா சமுத்திரம்போன்றது. விஞ்ஞானம் மேம்பட்டு விளங்கும் இக் காலத்திலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆக்கப் பெற்ற திருக்குறள், போற்றிப் புகழப்படுவதிலிருந்து, அதன் சிறப்பையும், மதிப்பையும் விழாவெடுத்துக் கொண்டாடினாலும் போதாதென்றே கூறக் கிடக்கின்றது. இந்து மதத்தவர் அன்றி எல்லா மதத்தவராலும் போற்றப்படுவது திருக்குறள். நாற்பதுக்கு மேற்பட்ட பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதே திருக்குறளின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது."

இவ்வாறு உருக்திரபுரம் மகாதேவ ஆச்சிரமத் தலைவர் ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சாவகச்சேரி முருகமூர்த்தி கோவிலில் நடைபெற்ற திருவள்ளுவர் விழாவிற்குத் தலைமைவகித்து உரையாற்றும் போது கூறினர்.

திருவள்ளுவர் திருவுருவம் அலங்கரிக்கப்பெற்ற பீடத்தில் அமர்த்தி மேளவாத்தியத்துடன் செருக்கல் பிள்ளையார் கோவிலிலிருந்து முருகமூர்த்தி கோவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

சைவசமய வளர்ச்சிச் சங்க ஆதரவில் சாவகச்சேரி எம்.பி. திரு வி. என். நவரத்தினம் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. திரு வி. சுப்பையா, திரு. கே. குமாரசாமி ஆகியவர்களின் தலைமையில் பஜனைக் கோஷ்டியார் பின்தொடர்ந்து பஜனை செய்தனர்.

திரு. நவரத்தினம் எம். பி. விழாவில் கூறியதாவது:-

"இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன், பிறவிபாகிய கொடிய நோயிலிருந்தும் தப்பிப் பிழைப்பதற்கு நூற்றுமுப்பத்து மூன்று வைதிய சாலைகள் போன்று நூற்றுமுப்பத்து மூன்று அதிகாரங்களையும் அவ்வைத்தியசாலைகளில் காயகற்பக் குளிகைகள் போன்ற ஆயிரத்து முந்நூற்றுமுப்பது திருக்குறள் வெண்பாக்களையும், தேவர் திருவள்ளுவர் மாண்புமிக்க மனிதகுலத்திற்கு ஆக்கித் தந்தார். அவற்றை உண்டு நாம் நம்மைப் புனிதப்படுத்திக்கொள்ளுதல் தலைசிறந்த கடமையாகும். அவை மனித குலத்தைப் புனிதப்படுத்தி உய்வித்துக்கொண்டிருப்பதால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் அவற்றின் மதிப்பும் மாற்றும் குறையாமல் போற்றிப் புகழப்படுகின்றன.

வித்துவான் திரு. எம். சபாரத்தினம், திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள், திரு. ரி. கனகரமிதன் ஆகியவர்கள் திருக்குறள் சிறப்பையும், வாழ்க்கையையும்பற்றிப் பேசினர்.

ஸ்ரீமதி மோகனும்பிகை கணேசனும், ஸ்ரீமதி பூமணி இராசரதத்தினமும் இன்னிசை விருந்தளித்தனர்.

கைப் பந்தாட்டம்

ஹாட்லிக் கல்லூரி சாம்பியனுகத் தெரிவு

பருத்தித்துறை, புவன் வடமராட்சி ஆங்கில ஆசிரியர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி சாம்பியனுக வெற்றியீட்டியுள்ளது.

மொத்தம் ஏழு கல்லூரிகள் கலந்துகொண்ட இப்போட்டியின் இறுதி ஆட்டம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்றது.

5 ஆட்டங்களில் 1-ம், 4-ம், 5-ம் ஆட்டங்களை ஹாட்லி வென்றது.

இரு கல்லூரிகளும் முறையே 15:5, 12:15, 8:15, 15:3, 15:4 புள்ளிகளைப் பெற்றன.

—

தங்கம், கடிகாரம் கள்ளக்கடத்தல்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு

கொழும்பு, வியாழன்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு 'கொப்பரு' ஏற்றிச் சென்ற ஒரு பாய்க்கப்பலில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கப் பாளங்களும், கைக்கடிகாரங்களும் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பாய்க்கப்பலின் காப்டன் 9,000 ரூபாய் பிணையில் விடுதலைசெய்யப்பட்டார்.

குறிப்பிட்ட பாய்க்கப்பல்' கொழும்புக்கும் தூத்துக்குடிக் குமிடையில் வழக்கமாகப் போக்குவரத்து நடத்துகிறதென்றும், சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பாய்க்கப்பல், இலங்கையிலிருந்து கொப்பரு ஏற்றிக்கொண்டு தூத்துக்குடி நோக்கிப் புறப்பட்டுச் சென்ற தென்றும் கூறப்படுகிறது.

தூத்துக்குடி சுங்கப்பகுதியினரிடம் தப்பிக்கொண்டு, இவர்கள் தங்களது கள்ளக் கடத்தல் சாமான்களுடன் திருநெல்வேலியிலுள்ள ஒரு வர்த்தகரிடம் இவற்றை விற்பனை செய்வதற்குச் சென்றனரென்றும், திருநெல்வேலியில் இவர்கள் பிடிப்பட்டனரென்றும் சொல்லப்படுகிறது. இவர்களிடம் தங்கப் பாளங்களும் கைக்கடிகாரங்களும் இருந்தாம்.

குறிப்பிட்ட பாய்க்கப்பலின், மாலுமிகள் வழக்கமாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கள்ளத்தனமாக தங்கமும், கைக்கடிகாரங்களும் கடத்திச் செல்கின்றனரெனத் தெரிய வருகிறது. பாய்க்கப்பலின் காப்டன் 9,000 ரூபாய் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மாலுமிகள்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பாய்க்கப்பல், ஒரு இந்திய பாய்க்கப்பலாகும்.

—

அபராதம்

கொழும்பு, வியாழன்

ஒரு அங்குல சுற்றளவுக்குக் குறைவாகக் காணப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட 2,500 மூடைகள்கொண்ட ஈரவெங்காயத்தை கொழும்பு சுங்கப் பகுதியினர் பறிமுதல் செய்துள்ளனர். இந்த வெங்காயத்தை இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்த 10 பேருக்கு ரூ. 48,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக ஒருவித பொத்தான்களை இறக்குமதி செய்த கொழும்பு வர்த்தகர் ஒருவருக்கு சுங்கப்பகுதியினர் ரூ. 18,000 அபராதம் விதித்துள்ளனர்.

வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 15-3-63

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இன்னிய நற்சிந்தனை, 7-15 குமாரசாமி இரத்தினகோபால் — பக்திப்பாடல்கள், 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 இராமநாதன் கல்லூரி தியாகராஜாவிழா ஒலிப்பதிவுகள், 8-00 முன்னிம்நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 இராமநாதன் கல்லூரி தியாகராஜா விழா ஒலிப்பதிவுகள்.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 இ. அம்மையப்பன் நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர்நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 எஸ். ஆர். ராஜலக்ஷ்மி — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'பொங்கி எழும் பாரதம்' — சித்திரம், 7-45 எம். வி. வராகசுவாமி — கோட்டுவாத்தியம், 9-15 பலகணி, 9-30 மெல்லிசை, 9-45 வெற்றிப்பாதையில் : சித்திரம்.

—

4,000 டயர்கள் இ. போ. ச. இறக்குமதி செய்யும்

கொழும்பு, வியாழன்

இலங்கை போக்குவரத்து சபை விரைவில் 4,000 டயர்கள் இறக்குமதி செய்யவிருக்கிறது. போதிய டயர்கள் கையிருப்பில் லாத காரணத்தினால் கராஜுகளிலிருக்கும் பஸ்களை இயங்கச் செய்யவும், இப்போது சேவையிலிருக்கும் பஸ்களுக்குப் புதிய டயர்கள் பொருத்தவும், டயர்கள் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன.

டயர்கள் பற்றாக் குறையை நீக்கும்பொருட்டு, இ. போ. ச. முன்னர் தனிப்பட்ட ஸ்தாபனங்களிடம் 500 டயர்கள் வாங்கியது.

—

பொலிஸார் விசாரணை செய்வர்

கொழும்பு, வியாழன்

புரட்சி சதி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிர் வாதி காப்டன் நிமால் ஜயக்கொடியின் மணிக்கட்டில் ஏற்பட்ட வெட்டுக் காயங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யும்படி பொலிஸார் கேட்கப்பட்டுள்ளனர்.

மகளின் சிறைச்சாலையின் சுப்பிரின்டன் திரு. ஜே. என். ஆர். ஜோர்டான் இது சம்பந்தமாக சிறைச்சாலை இலாகாவிடம் தமது அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்.

விவசாயிகள் சம்மேளனம் உதயம்

திருக்கோணமலை, புதன்

"இளம் விவசாயிகள் கழகங்களை வழிநடத்துவதற்கு மொழி, மதம், சாதி பாகுபாடற்ற தலைவர்கள் தான் அவசியம் தேவை. நாட்டில் பொருளாதாரச் செழிப்பு உண்டாக, வறுமை அகல இளம் விவசாயிகள் கழக உறுப்பினர்கள் பாடுபடவேண்டியது அவசியம்"

இவ்வாறு உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. ஜீ. தியாகராசா கொட்டியாபுரப் பற்று இளைஞர் விவசாயக் கழகங்களின் தலைவர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். கிளிவெட்டியில் நடைபெற்ற இவ்வாலோசனைக் கூட்டத்தில் மல்லிகைத்தீவு கிராமசபை அக்கிராசனர் திரு. பூ. வினயகமூர்த்தியும் கலந்துகொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மகாவலிகம, லோப்பள, தெகிவத்த, வாழைத்தோட்டம், ஈச்சிலம்பற்றை, ஆரிப்பு, தோப்பூர் ஆகிய இடங்களிலுள்ள இளம் விவசாயிகள் கழகத் தலைவர்கள் கலந்துகொண்டனர். கொட்டியாபுரப் பற்று இளம் விவசாயிகள் கழகங்கள் சம்மேளனத்தின் தலைவராக விவசாய போதனாசிரியர் திரு. இ. ஆர். மார்ட்டினும், செயலாளராக உணவு உற்பத்தி மேற்பார்வையாளராக திரு. ஜீ பாக்கியராஜாவும், சம்மேளன உறுப்பினர்களாக ஸ்ரீசங்கரன் இளம் விவசாயிகள் கழகத்தைச் சேர்ந்த திரு. பி. ஜே. குரூஸ், மஹாவலிக இ. வி. க. சேர்ந்த திரு கே. ஏ. அப்புகாமி, ஸ்ரீகெமுனு இ. வி. க. சேர்ந்த எல். மாதொஹேவா, ஸ்ரீமுருகன் இ. வி. க. சேர்ந்த திரு. கே. கந்தலிங்கம், வாலைத்தோட்டம் இ. வி. க. சேர்ந்த திரு. அமவோற்பவதாஸ், தோப்பூரைச் சேர்ந்த ஜனப் முஹம்மது, செஹிவத்தை திரு. பி. வி ஜயசிங்கர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

'சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்குக'

ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கு சிறுபான்மைத் தமிழர் மகஜர்

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக அண்மையில் வெளியான 'கஸெட்' அறிவித்தல்மூலம், எங்கள் சமூகத்தினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லையென்பது தெரியவருகிறது. எங்களது தூதுகோஷ்டிக்குத் தாங்கள் வாக்களித்திருப்பதுபோல், மாநகரசபை வட்டார விஸ்தரிப்பில் எங்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் கொடுக்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம்."

ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை அனுப்பியுள்ள மகஜரொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "சிறுபான்மைத் தமிழர் சமூகத்தினருக்கென வட்டாரங்களோ அல்லது தொகுதிகளோ நிர்ணயிக்கப்படும்வரை, ஸ்தல ஸ்தாபன சபை அல்லது பார்லிமெண்ட் தேர்தல்களில் போட்டியிடவோ அன்றி வெற்றி பெறவோ சிறுபான்மைத் தமிழருக்கு வாய்ப்பு இருக்காது.

யாழ்ப்பாணம் மாநகரசபை வட்டார விஸ்தரிப்பு சம்பந்தமாக கடந்த பெப்ரவரி மாதம் 5-ம் திகதி சிரேஷ்ட உதவி கமிஷனரை எமது தூதுகோஷ்டி சந்தித்து எங்களது நிலைமையை எடுத்துக் கூறியது.

வட்டார விஸ்தரிப்புகுறித்து ஸ்தலஸ்தாபன கமிஷனருக்கும் ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் வட்டார விஸ்தரிப்புப்பற்றி அண்மையில் வெளியான 'கஸெட்' அறிவித்தல்மூலம் எங்களது வேண்டுகோள் ஆராயப்படவில்லையென்பது நன்கு தெரிகிறது.

எங்களைப்போன்று பாதிக்கப்படாத கரையூர் மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. கரையூர் மக்கள் அதிகமாகவுள்ள இடத்தில், இரண்டு வட்டாரங்கள் இப்போது இருக்கின்றன. தற்போது மூன்று மாநகரசபை அங்கத்தினர்கள் உண்டு. ஆனால் புதிய 'கஸெட்' அறிவித்தல் மூலம், கரையூர் மக்கள், நான்கு அங்கத்தினர்களை தெரிவுசெய்யக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதிலிருந்து எங்கள் சமூகத்தினருக்குத் தாங்கள் எந்தவிதத்திலும் உதவி செய்யவில்லையென்பது நன்கு புலனாகிறது.

சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது எங்களுக்கு உதவிசெய்வதாக எங்கள் தூதுகோஷ்டியினருக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து, நாங்கள் இம்மகஜரைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். எங்கள் சமூகத்தினருக்கென வட்டாரங்கள் பிரிக்கப்பட்டு, மாநகரசபை தேர்தல்களில் எங்கள் பிரதிநிதிகளும் இடம்பெற வகைசெய்யுமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்."

நீங்கள் அறியவேண்டியதோர் இரகசியம்

போஸ்



BOSS

மனைணெய் அடுப்புகள்

நீடியகால சேவையையும், சிக்கன சமையலையும் அளிப்பதற்கென தயாரிக்கப்பட்டவை.



சமையல் அடுப்பு — 27U — 2 பர்னர்கள்

போர்சலேன் மேற்புறம், கிரேட்டல் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் இளால் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு.



சமையல் அடுப்பு — 37U — 3 பர்னர்கள்

போர்சலேன் மேற்புறம், கிரேட்டல் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் இளால் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும் பின்புறமும். நிற்கும் மோடல் உண்டு.



சமையல் அடுப்பு — 20U — 2 பர்னர்கள்

மத்தியில் எரிபொருள் தாங்கி உள்ளது. சமைப்பதற்கென விசாலமான மேற்புற வசதியுண்டு. போர்சலேன் மேற்புறம், கிரேட்டல் மற்றும் டிரம் புகைப் போக்கிகள். 2 கால் கலன் இளால் எரிபொருள் தாங்கி. ஒரே துண்டு அடிப்புறமும், பின்புறமும், நிற்கும் மோடல் உண்டு

போஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு: CWE ஹி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், ஹி. டப்ளியூ. ஈ. கடை மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்களில்

CWE HWE

வடபகுதி அசைஸ்விசாரணை

கொடிகாமம் கொலை வழக்கில் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

வட பகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் கொடிகாமம் கொலைவழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, சாட்சியங்கள் திருப்தியில்லாத படியால், ஜூரிகள், எதிரிகளை சுற்றவாளிகளென ஏகமனதாக தெரிவித்தபின், நீதியரசர், எதிரிகளை விடுதலைசெய்து தீர்ப்புக் கூறினர்.

தீர்ப்பளிக்குமுன் நீதியரசர், சாட்சிகளாகிய, பொன்னையும் கதிரையும் பார்த்து "அன்றிரவு பயமிருந்ததென்னீர்கள் பொய் சொல்ல கொஞ்சம்கூடப் பயப்படவில்லை இரண்டு பேர் சொல்லிய சாட்சியமும் பொய்" என்று கூறினர்.

1962-ம் ஆண்டு சித்திரை மாதம் 4-ம் தேதி கொடிகாமத்தில் சின்னவன் சடையன் அல்லது சின்னத்தம்பி சதாசிவம் என்பவரை, பொன்னையா முத்துத்தம்பி அல்லது குஞ்சுத்தம்பி, ஆறுமுகம் கனகரத்தினம் அல்லது இராசு ஆகியோர் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1-வது எதிரிக்காக திரு. செரிபிம், திரு. கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும் திரு. வி. சல்லத்தம்பி, திரு. வல்லிபுரம் ஆகியோரின் அனுசரணையுடனும் ஆஜரானார். 2-வது எதிரி சார்பில் திரு. டி. கணேசலிங்கம், திரு. செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானர். அரசாங்கத்தின் சார்பில் எதிரிக்காக திரு. நாகராசா நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. வேல்வி போல் ஆஜரானர்.

பொன்னன் என்பவர் சாட்சியமளித்தபின், எதிரிகளின் வழக்கறிஞர் திரு. செரிபிம் குறுக்குவிசாரணை செய்தார்.

வழக்கறிஞர்: ஆஸ்பத்திரிக்கு உள்ளே போனீர்?

சாட்சி: கேற்றடியில் போனேன்!

நீதியரசர்: இறந்தவருக்கு நீர் சொந்தக்காரரா?

சாட்சி: இல்லை.

வழ: சம்பவம் நடந்த இடத்திலிருந்து பார்த்தால் கொடிகாமச் சந்தி தெரியும்?

சாட்சி: மரங்கள் நிற்பதால் மறைவாயிருந்தது.

நீதியரசர்: அது கேர் ரோட்டல்லவா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: மரங்கள் நடு ரோட்டில் இல்லை. ஆதலால் சந்தி தெரியும்.

சாட்சி: ஆம்.

வழ: சடையன் கதிரனுக்கு சொந்தமா?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: சாவகச்சேரியிலிருந்து அம்மன் ஊர்வலம் வந்ததா?

சாட்சி: ஆம்.

நீதியரசர்: எல்லோருக்கும் தெரியும்! அம்மன் வருவதுபற்றி!

சாட்சி: ஆம்.

நீதியரசர்: அம்மனை வரவேற்கவும், வியாபாரம் செய்யவும் கடைகளை திறந்திருப்பார்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

தாயார்-முதல் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரர்களும் வெளிவிருந்தையில் படுத்தோம் தகப்பனர் நிலத்தில் ஜமுக்காளத்தில் படுத்தார். மறுநாள் காலை 6 மணிக்கு நான் விழித்தபோது தகப்பனரைக் காணவில்லை. தாயாரைக் கேட்டபோது தகப்பனர் நெடுந்தீவுக்குப் போனதாகச் சொன்னர். 1-வது, 2-வது எதிரிகள் அங்கு இல்லை. சற்று நேரத்தின்பின் திரும்பி வந்தபோது 1-வது எதிரிகையில் ஒரு மண்வெட்டியும், 2-வது எதிரியிடம் ஒரு சைக்கிளும் இருந்தது. தாயாருடன் அவர்கள் ஏதோ கதைத்தார்கள் என்ன கதைத்தார்கள் என்று என்னால் கூறமுடியாது. மறுநாள் பின்னேரம் 2 மணிக்கு தாயார் எங்களை பக்கத்துக் கொண்டுபோனர். சில நாட்களின்பின் உருத்திரபுரத்திற்குக் கூட்டிவந்தார். அதன்பின் எங்கள் சிறியதகப்பனர் நாராயணசர்மா எங்களை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்றார்.

தாயார் எங்களைத் தனிமையில் விட்டுவிட்டு, இளைய சகோதரருடன் உருத்திரபுரத்திற்குப் போய்விட்டார். சில நாட்களின்பின நெடுந்தீவு விதானையனது தாயாரை நெடுந்தீவுக்குக் கூட்டிவந்தார். அதன்பின் சிறியதகப்பனர், தாயாரையும் இளைய சகோதரனையும் பளைக்குக் கூட்டிச் சென்றார். நாங்கள் தோடர்ந்து நெடுந்தீவில் வசித்தோம். 1-வது எதிரி அம்மாவைத் தேடி அங்கே வந்தபோது, விதானையாரும் நாங்களும் அடிதடிதோம் பின்னர்தான தகப்பனர் இறந்ததாக அறிந்தேமே".

இன்று காலைவரைவிசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இன்று

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவிருக்கிறது. நீதியரசர் திரு. ஏ. ஸ்ரீஸ்கந்தராஜா பரிசளிப்பு உரை நிகழ்த்துவார். திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா பரிசுகளை வழங்குவார்.

"தமிழ் மட்டும் என்பது குறுகிய நோக்கம்"

சென்னை, மார்ச் 14

தமிழை மட்டும் பாடமொழியாக்குவது மிகவும் குறுகிய நோக்கமுடையதாகும் என தமிழ் நாட்டு கல்வி மந்திரி திரு. பக்தவத்சலம், சட்டசபையில் கூறினர்.

காலமானர்

புதுடில்லி, மார்ச் 14

ராஜ்ய சபை அங்கத்தினரும் முன்னாள் ராஜஸ்தான் முதன் மந்திரியுமான ஸ்ரீஜய்நாராயண் வியாஸ் இன்று தமது 64-வது வயதில் காலமானர்.

இலங்கைக்கு உபகாரச் சம்பளம்

கொழும்பு, வியாழன்

மேற்கு ஜெர்மனி 2 இலங்கை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கத் தீர்மானித்திருப்பதாய், இங்கு வந்துள்ள மேற்கு ஜெர்மன் தூதுகோஷ்டி பிரதமருக்குத் தெரிவித்துள்ளது.

இறுதி மரியாதை

யாழ்ப்பாணம, வியாழன்

வண. எம். எஸ். நல்லை ஆ ஒ. எம். ஐ. மாரடைப்பினால் மரணமானர். அவரின் இறுதிச் சடங்கை யாழ்ப்பாணம் மேற்றிராணியார் அதி. வண. ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஒ. எம். ஐ. நடத்தி வைத்தார். பல சுவாமிமாரும் கன்னியாஸ்திரீகளும், குருத்துவ மாணவர்களும் தங்களது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

சீன - சோவியத் கடித போக்குவரத்து

பீக்கிங், மார்ச் 14

இன்றைய பீக்கிங்பத்திரிகைகளில்எல்லாம் சீன - சோவியத் கடிதப் போக்குவரத்துக்கள் பிரபலமாக பிரசுரிக்கப்பட்டிருந்தன. திரு. குருஷ்சேவ், கம்போடியாவுக்குச் செல்லும் வழியில் பீக்கிங்குக்கு வருமாறு சீனத் தலைவர் மாஸேதுங் அழைத்துள்ளார்.

வேலை நீக்கம்

கொழும்பு, வியாழன்

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, சுபறீம் கோர்ட் விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்ட திரு. நியூட்டன் பெரேரா பொலிஸ்படைச் சேவையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்படடுள்ளார். இவர் பொலிஸ் இலாகாவில் இன்ஸ்பெக்டராகக் கடமையற்றினர். பண்டாரநாயக்கா கொலை வழக்கில் அவர் எவ்வாறு சம்பந்தப்பட்டார் எனப் பொலிஸ் இலாகா ஒரு விசாரணை நடத்தியது. அந்த விசாரணையைத் தொடர்ந்தே திரு. நியூட்டன் பெரேரா வேலைநீக்கம் செய்யப்பட்டுளளார்.

போஸ் நினைவு சின்னம்

புதுடில்லி, மார்ச் 14

சுபாஸ்சந்திரபோஸின் நினைவுச்சின்னத்தை அமைக்க தனியார் முயற்சி எடுத்துகொண்டால் அது வரவேற்கப்படும் என லோகசபையில் அறிவிக்கப்பட்டது.

ஒன்பது வட்டாரங்களிலும் சமஷ்டிக்கட்சி போட்டியிடும்

பருத்தித்துறை நகரசபை தேர்தலில்?

யாழ்ப்பாணம், வெள்ளி

பருத்தித்துறை நகரசபையின் முதலாவது பொதுத் தேர்தல் ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கிறது. பருத்தித்துறை நகரசபையின் 9 வட்டாரங்களுக்குமான வாக்காளர் இடாப்புக்கள் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணம் தேர்தல் பகுதியில் வாக்காளர் இடாப்பு தயாரிப்பு வேலைகள் ஆரிதமாக நடைபெற்று வருகின்றன.

மொத்தம் ஒன்பது வட்டாரங்களிலும் தமிழரசுக் கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்த விருக்கிறதெனத் தெரியவருகிறது. ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் அபேட்சகர்களை நிறுத்தும்பொறுப்பு அந்தந்தக் கட்சிக் கிளைகளிடம் தமிழரசுக்கட்சி ஒப்படைத்துள்ளது.

மாநகரசபைக்கு வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், வியாழன்

கீழ் வரும் பிரேரணையை மாகநகரசபை மாதாந்தக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளும்மடி உதவி மேயர் திரு. துரைராஜசிங்கம் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

"யாழ்ப்பாண மாநகரசபையின் மதிப்பீடுகள் யாவும் ஏழைமக்களைப் பாதிக்கும் வகையில் முரண்பாடுகள் அடங்கிய திட்டத்தின் கீழ் இயங்கி இதன் காரணமாக சிலருக்கு வரிகள் குறைவாகவும் சிலருக்குக் கூடுதலாகவும் இருப்பதால், மேற்கூறிய வரி மதிப்பீடுகள் யாவையும் ஒரு முகமாக்கி அவைகளை மீண்டும் பரிசீலனை செய்து வரிகளைக் குறைத்து ஏழை வரியிறுப்பாளருக்கு உடனடியாக விமோசனம் அளிக்கவேண்டும் என்று இச்சபை தீர்மானிக்கிறது".

சமஷ்டிக் கட்சி செயற்குழு நாளை கூடுகிறது

நேரடி இயக்கம் பற்றி ஆராயப்படும்

யாழ்ப்பாணம், வெள்ளிகிழமை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு நாளை சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் கிளிநொச்சியில் கூடவிருக்கின்றது. செயற்குழுக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் அடுத்த நடவடிக்கைகள் பற்றிய இறுதி முடிவுகள் செய்யப்படுமெனத் தெரிகிறது.

கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவகந்தரம் இல்லத்தில் நடைபெறவிருக்கும் இச் செயற்குழுக் கூட்டத்தில் தமிழரசு எம். பி. க்களைத் தவருது கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

அடுத்த மாதம் 17-ம் திகதியன்று தமிழரசுக் கட்சியினர் நேரடி நடவடிக்கையில் இறங்குவதென்று ஏற்கனவே செய்த முடிவைப்பற்றியும், நேரடி நடவடிக்கை எவ்வாறு அமைய வேண்டும் என்பதுபற்றியும் இறுதி முடிவு செய்யப்படவிருக்கின்றது.

பொருளாதார, சமூகப் பிரச்னைகள் பற்றியும் இக் கூட்டத்தில் ஆராயப்படுமெனத் தெரிகிறது.

பொருளாதாரப் பிரச்னையை முன்னிட்டுத் தமிழ் மக்களுக்கு காணிகளைக் கொடுக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்துவதுபற்றியும் சிறு கைத்தொழில்களை அமைப்பதோடு, மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வது ஆகிய வழி கொள்வதுபற்றியும் கமிட்டி ஆராயும்.

ஏப்ரல் 17-ம் திகதி நடாத்தப்பட விருக்கும் நேரடி நடவடிக்கை இலங்கைவாழ் தமிழ் மக்களின் அரசியல் குறிக்கோளுக்காகியது என்று கருதப் படுகிறது.

அவசரகாலச்சட்டம் அமுலில் இருப்பதனை முன்னிட்டு நேரடி நடவடிக்கை எவ்விதம் அமைய வேண்டும் என்பதனை நிர்ணயிப்பதே இச் செயற்குழுக் கூட்டத்தின் நோக்கமாக இருக்கும்.

செயற்குழுவின் இறுதி முடிவுகள் எவ்வாறுசெய்யப்படுகின்றனவோ அதனைப் பொறுத்தே எதிர்கால நடவடிக்கை அமையும் எனத் தமிழரசுக்கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சுதந்திர தொழில் சம்மேளனம் கண்டனம்

புதுடில்லி, மார்ச் 14

சர்வதேச சுதந்திர தொழிற் சங்க சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டி, சீன ஆக்கிரமிப்பையும், கொழும்பு மகாநாட்டு யோசனைகளை அதுஏற்காததையும் கண்டித்துள்ளது.

இப்பொழுது நடைபெறுகிறது

வீர காவியம் !!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜய (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன)

மொடர்ன் (பதுளை) தீவொளி (துவரேலியா) ஜெமினி (ரூகலை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)

மற்றும் திரைகளில்!

தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? எனறு கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன.

★ பார்த்தோர் பரவசப்படுகிறார்கள்
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிறார்கள்

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி

மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
பி. பு. சின்னப்பா, எம். எஸ். சரோஜினி
நடித்த
ஜெகதலப்பிரதாபன்

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேல் வீதி 53-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.